ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேடரிங்


# தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 35 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL ஞாயிறு, நவ 26 - டிச 2, 2023, 8 பக்கங்கள், ₹ 5/- ஆண்டு சந்தா - ₹ 260/-


SREE Annapoorna SREE Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

# அறிவியலில் அசைக்க முடியாத சக்தி இந்தியா!

**- கலைச்செல்வி, செயலாளர், மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்**





இடது, பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற மாணவர்கள் மற்றும் வலது, பட்டமளிப்பு விழாவில் மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் செயலாளர் கலைச்செல்வி மாணவ மாணவியருக்கு பட்டங்களை வழங்கினார். உடன், பி.எஸ்.ஜி & சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் எல்.கோபாலகிருஷ்ணன், கல்லூரி முதல்வர் பிருந்தா.

✍ வெ.சீ.அனிஷா, தி கோவை மெயில்

பி.எஸ்.ஜி கலை கல்லூரியின் 36வது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் செயலாளர் கலைச்செல்வி கலந்து கொண்டு, அறிவியல் தொழில்நுட்பங்களில் அசைக்கமுடியாத சக்தியாக இந்தியா உருவெடுத்து வருகிறது என்று பேசினார்.

இதுகுறித்து மேலும் அவர் கூறியதாவது:

நிலைத்தன்மை, நிலையான வளர்ச்சி இலக்குகள், நேஷனல் டெக்னாலஜி டெக்ஸ்டைல்ஸ் மிஷன், அடல் இன்குபேஷன் சென்டர் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகித்து வரும் இக்கல்லூரியில் விளையாட்டு துறை மற்றும் ஆராய்ச்சியில் சாதனைகள், முன்னாள் மாணவர்களால் வழங்கப்பட்ட நிதி உதவி, விளையாட்டுத் துறையில் தலைமை என இக்கல்லூரியின் புகழை பாராட்டுவதற்கு இந்நாள் போதாது. ஏனென்றால், இந்த நிறுவனத்திற்கு அத்தகைய மரபு உள்ளது.

> **“ சிறந்த கல்வி நிறுவனங்களுக்கான அடையாளமாக பி.எஸ்.ஜி. கல்வி நிறுவனம் உயர்ந்தோங்கி நிற்கிறது.**

மேலும், நான்கு சகோதரர்களை கொண்டுள்ள இந்நிறுவனத்தில் மனிதர்கள் அல்லாத ஐந்தாவது குழு ஒன்று இருக்கிறது என்பதை கோபாலகிருஷ்ணன் தனக்கு எடுத்துரைத்தார். நிறுவனத்தின் சகோதரர்கள் என நால்வர் இருந்தபோதிலும், அவர்களின் முழு சொத்தும் ஐந்தாகப் பிரிக்கப்பட்டது. அதன் வகையில் பி.எஸ். ஜி கல்வி நிறுவனமே அந்த ஐந்தாவது சகோதரராக செயலாற்றி வருகிறது. இத்தகைய நிறுவனத்தில் கல்வி கற்றவர்கள் அனைவரும் அதிர்ஷ்டசாலிகள், ஏனெனில் தொலைநோக்கு பார்வை கொண்ட தலைவர்கள் ஒவ்வொரு நாளும் சாதித்து கொண்டிருக்கிறார்கள், அதன் ஒரு பகுதியில், தொலைநோக்கு தலைவரின் அடையாளமாக இந்நிறுவனத்தில் கோபாலகிருஷ்ணன் இருக்கிறார் என்று பாராட்டினார்.



மாணவர்கள் தனக்கான வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் சிந்திக்க வேண்டும். நீங்கள் போராடாமல் உங்களுக்கு ஏதேனும் எளிதில் கிடைத்துவிட்டால், அதனின் மதிப்பு தெரியாமல் போகிவிடும். எனவே, இக்கல்லூரியில் பயின்ற மாணவர்கள் அனைவருக்கும் இது ஓர் சிறந்த வாய்ப்பாகும். அதை சரியாக பயன்படுத்தி இனிவரும் நாட்களில் பொறுப்புள்ள குடிமக்களாக இருக்க வேண்டும். மனித வள மேம்பாட்டில் இந்தியா மிகவும் வளமாக இருப்பதை இந்தியர்களாகிய நாம் பாராட்ட வேண்டும். இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி குழு (இஸ்ரோ), இந்தியர்களால் எதையும் சாதிக்க முடியும் என்ற எண்ணத்தை கருத்தில் கொண்டு நிலவின் தென் துருவத்தில் முதல் முறையாக சந்திரயான் 3 விண்கலம் மென்மையான தரையிறக்கத்தை மேற்கொண்டனர் என்று பேசிய அவர்,

இக்கல்லூரியில் அனைத்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நாட்களை விழிப்புணர்வுடன் கொண்டாடப்படுவது என்னை வியப்பில் ஆழ்துகிறது. அதன் வகையில், சிறந்த கல்வி நிறுவனங்களுக்கான அடையாளமாக பி.எஸ்.ஜி. கல்வி நிறுவனம் உயர்ந்தோங்கி நிற்கிறது. அதற்கு மாணவர்கள் அனைவரும் தங்களது பெற்றோர்களுக்கு நன்றி கூறி பெருமையடைய வேண்டும் என்றார்.

பி. எஸ். ஜி. கலை கல்லூரி, தொழில்நுட்ப கல்லூரி, மருத்துவம் சார்ந்த கல்லூரி என அனைத்தையும் உள்ளடக்கியுள்ள பி. எஸ். ஜி குழுமத்தில் உடற்கல்விக்கான நிறுவனத்தை தொடங்குமாறு, கல்லூரி அறங்காவலர் கோபாலகிருஷ்ணனிடம் வலியுறுத்தினேன். ஏனெனில், நமது எதிர்காலத்தை வடிவமைப்பதற்காக நாம் மேற்கொள்ளும் கடின முயற்சி இன்றைய நிலையிலும் போதுமானதாக இல்லை. 21ம் நூற்றாண்டில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களில் இந்தியா அசைக்கமுடியாத சக்தியாக உருவெடுத்து வருகிறது. அதற்கான முயற்சிகளில் நாம் பங்கு பெற்று செயலாற்ற வேண்டும் என்ற எண்ணம் அனைத்து மாணவர்களிடையே வரவேண்டும். இந்தியாவின் வெற்றியை அனைத்து இந்தியர்களும் கொண்டாடுவதை போல அதன் தோல்விகளுக்கும் நாம் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். இந்தியாவின் 2047 ஆண்டை குறித்து நாடு முழுவதும் தீவிரமாகத் திட்டமிட்டு வருகின்றன. எனவே இந்தியர்களாகிய நமக்கு அடுத்த 24 ஆண்டுகள் மிகவும் சவாலானதாக இருக்க கூடும் என்றார்.

> **“ இந்தியாவின் அடுத்த 24 ஆண்டுகள் சவாலானவை.**

மேலும், அறிவியலும், தொழில்நுட்பமும் நமது திறனை மேம்படுத்துவதற்கு மட்டுமே உதவுகிறது. எனவே மாணவர்கள் தங்கள் மொபைல் போனில் செலவிடும் நேரத்தை குறைத்து கொள்ள வேண்டும். எதிர்காலத்தை பற்றி சிந்தித்து அதற்கு தேவையான முயற்சியை மிகுந்த கவனத்துடன் செய்ய வேண்டும் என மாணவர்களிடம் வலியுறுத்தினார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர் கலைச்செல்வி பல்வேறு துறைகளை சேர்ந்த மாணவர்களுக்கு 14 முனைவர் பட்டம், 870 முதுகலை பட்டங்கள் , 3121 இளநிலை பட்டங்கள் மற்றும் முதல் மதிப்பெண் பெற்ற 68 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

முன்னதாக நிகழ்விற்கு வரவேற்புரை வழங்கிய கல்லூரி முதல்வர் பிருந்தா, கல்லூரியின் செயல்பாடுகள், மாணவர்களின் சாதனை, மாணவர்களின் கல்வித் திறன் ஊக்குவிப்பில் நிறுவனத்தின் பங்கு போன்றவற்றை எடுத்துரைத்தார்.விழாவின் இறுதியில் கல்லூரி துணை முதல்வர் அங்குராஜ் நன்றியுரை வழங்கினார்.

## கல்லூரி சூழல் பல அனுபவங்களை கற்றுக்கொடுக்கும்



**- எல். கோபாலகிருஷ்ணன்,**
**நிர்வாக அறங்காவலர், பி.எஸ்.ஜி & சன்ஸ் அறக்கட்டளை**

நிகழ்விற்கு பி.எஸ்.ஜி & சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் எல். கோபாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். அவர் தமது உரையில் இந்நிகழ்வை கௌரவித்த சிறப்பு விருந்தினர் கலைச்செல்வி அவர்களுக்கு பி.எஸ்.ஜி & சன்ஸ் அறக்கட்டளையின் சார்பாகவும், கல்வி நிறுவனத்தின் சார்பாகவும் தனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

இன்றைய மாணவர்கள் நாளைய எதிர்காலம் என்பதை கருத்தில் கொண்டு கல்வி சேவையில் இன்றியமையாததாக பி.எஸ்.ஜி குழுமம் செயல்பட்டு வருகிறது. எங்களின் ஐந்தாவது சகோதரராக பி.எஸ்.ஜி அறக்கட்டளையை நிறுவினோம். பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கும், பெற்றோர் இழந்த மாணவர்களை தேர்ந்தெடுத்து தங்கும் இடம் வசதியுடன் கல்வி வழங்கி வருகிறோம். இக்கல்லூரியில் பயின்ற மாணவர்கள் உலகெங்கிலும் பரவி இருக்கின்றனர். இதுவே, பி.எஸ்.ஜியின் வெற்றியாக கருதுகிறோம். முன்னாள் மாணவர்களே கல்லூரியின் அடையாளம். வகுப்பறையில் மாணவர்கள் கற்றுக்கொள்ளும் பாடங்களைவிடக் கல்லூரியின் சூழல் அவர்களை திறம்பட செயலாற்ற உதவும். அந்தவகையில் நவீன உள்கட்டமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

இன்றைய நவீன தொழில் நுட்பங்களின் செயற்கை நுண்ணறிவு பல துறைகளில் முக்கிய பங்காற்றி வருகிறது. பொறியியல் துறைகளை கடந்து, வணிகவியல் மற்றும் மேலாண்மை துறைகளிலும் செயற்கை நுண்ணறிவு நுழைந்து புதுமை புரட்சி செய்து வருகிறது. மேலும், காட்சி தொடர்பியல் மற்றும் தொடர்பியல் துறையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. ஆகையால், கலை அறிவியல் துறை மாணவர்கள் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டியது கட்டாயமாகும். எனவே தொழில்நுட்ப புதுமைகளைக் கற்க தயாராகுங்கள் என்று மாணவர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், பி.எஸ்.ஜி கல்வி நிறுவனம் கலை, அறிவியல், வணிகம் மற்றும் மேலாண்மை ஆகியவற்றில் இளங்கலை மற்றும் முதுகலை திட்டங்களை வழங்கி வருகிறது. இந்நிறுவனத்தில் கல்லூரியின் பட்டப்படிப்பு, கலை, சமூக அறிவியல், அறிவியல் மற்றும் வணிகவியல் ஆகிய துறைகளில் பயின்ற 4000க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்நாளில் பட்டம் பெறவுள்ளனர்., என்றார்.



# அதிகரிக்கும் காய்ச்சல் பயப்பட தேவையில்லை!

## - கே.எம்.சி.ஹெச் மருத்துவர் ஆலோசனை

✍ ப.சுகன்யா, தி கோவை மெயில்

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக காய்ச்சல் பாதிப்பு படிப்படியாக அதிகரித்து வருகிறது. கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் காய்ச்சல் பாதிப்புகளுடன் அரசு மருத்துவமனைகளுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கையில் 30 சதவீதம் அதிகரித்து இருப்பதாக சுகாதார துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மாவட்டம் முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் சராசரியாக 50 உள்நோயாளிகள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், தொற்று நோய் பரவாமல் தடுக்க முக கவசம் அணியுமாறு மாவட்ட நிர்வாகம் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டதுடன், தொற்று பரவாமல் இருக்க தடுப்பு நடவடிக்கைகளும் முழுவீச்சில் நடந்து வருகிறது.

எனினும், சர்க்கரை, இதய நோய் உள்ளிட்ட இணை நோய் பாதிப்பு உள்ளவர்கள் கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏனெனில், அவர்களின் நோய் எதிர்ப்பாற்றல் குறைவாகவே செயல்படும்.

அதாவது, ஹெச்1என்1 வைரஸ் பாதிப்பான ஃப்ளூ வைரஸ் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டவுடன் நோய் எதிர்ப்பு மண்டலம் வைரஸை எதிர்த்து போராடும் திறன் குறையும். கோவையில் அதிகரித்து வரும் ஃப்ளூ வைரஸ் பாதிப்புக்கு மக்கள் பயப்படத் தேவையில்லை.

அதேவேளையில், பன்றிக் காய்ச்சலால் உண்டாகும் அபாயங்கள் குறித்தும் ஆலோசனை தருகிறார் Dr.வருண் சுந்தரமூர்த்தி, பொது மற்றும் நோய் தொற்று சிறப்பு மருத்துவர், கோவை மெடிக்கல் சென்டர் ஹாஸ்பிடல் (கே.எம்.சி.ஹெச்).

### ஃப்ளூ புதியது அல்ல

நூற்றாண்டுக்கு முன்பே உலகம் முழுவதும் இன்ஃப்ளூயென்சா எனப்படும் ஃப்ளூ வைரஸ், பன்றிக் காய்ச்சல் மனிதர்களிடம் பரவி பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தி இருக்கிறது. ஆகையால், ஃப்ளூ புதிய வைரஸ் இல்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

பறவை காய்ச்சல் பறவைகளிடம் இருந்து மனிதர்களுக்கு பரவும். பறவைகள் இனப்பெயற்ச்சிக்காக இடமாற்றம் செய்கையில் வைரஸ் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு பரவுவது மிகவும் இயல்பான ஒன்று என்றாலும், ஆகஸ்ட் முடிந்து செப்டம்பர் மாதத்தில் இடைபட்ட நாட்களில் பன்றிக் காய்ச்சல் போன்ற ஃப்ளூ வைரஸ் தொற்றுகள் பரவ ஆரம்பிக்கும். இந்த காலங்கள் வைரஸ்களின் இனப்பெயர்ச்சி நாட்களாகும். பொதுவாக, வைரஸ் நோய் தொற்றுக்கள் அதிகம் பரவுவதும் இந்த மாதங்களில்தான்.

ஆகஸ்ட் மாதத்தில் இருந்தே ஃப்ளூ வைரஸ் தொற்றால் மக்கள் மருத்துவமனைக்கு வரதொடங்கி விடுவர். அதுவும், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் மனிதர்களிடத்தில் ஃப்ளூ தாக்குதல் அதிவேகமாக பரவி பாதிப்பை ஏற்படுத்திவிடும். கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் இந்த ஆண்டு ஹெச்1என்1 வைரஸ் மோசமான விளைவை ஏற்படுத்தியிருக்கிறது. உடல் நலம் சார்ந்து தீவிர பிரச்னையை சந்திக்க நேர்ந்திருக்கிறது.

2 வயதுக்குட்பட்ட குழந்தைகள், 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு ஃப்ளூ வைரஸ் அதிகம் பாதிக்கும். இதற்கான தடுப்பூசி இருப்பதால் யாரும் அச்சப்பட வேண்டாம். என்றாலும், இந்த வயதுடையோர் தொற்று பாதிப்பு வராமல் தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

### தடுப்பூசி இருப்பதால் கவலை ஏன்?

இந்த வகை வைரஸ் பாதிப்பில் இருந்து 45 வயதுக்கு மேல் இருப்பவர்கள் தங்களை தற்காத்துக் கொள்ள பன்றிக் காய்ச்சல் தடுப்பூசியை எடுத்துக் கொள்ளலாம். கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையில் இவ்வகை தடுப்பூசிகள் மேம்படுத்தலுடன் செலுத்தப்படுகின்றன. ஒரே ஒரு தடுப்பூசி கையில் போடப்படும். தடுப்பூசி எடுத்துக் கொண்ட முதல் இரண்டு வாரங்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். தடுப்பூசி போட்டபின் இரண்டு வாரங்களில் உடலின் நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகிவிடும். அதன்பிறகு தொற்று பாதித்தாலும், அதன் தீவிர தன்மை குறைந்து, சாதாரண உடல்வலி அல்லது காய்ச்சல் போல் வந்து சென்று விடும்.

முன்பெல்லாம், நோய் எதிர்ப்பு சக்தி இல்லாதவர்களுக்கு இந்த வைரஸ் தொற்றால் பெரிய பாதிப்பு ஏற்படவில்லை. ஆனால், கடந்த சில வாரங்களாக சிறிய வயதுடைய அதாவது, 25 வயதுக்குட்பட்ட மற்றும் 30 வயதுக்குட்பட்ட ஆண்கள், பெண்களுக்கு தற்போது பரவிவரும் வைரஸ் காரணமாக மாரடைப்பு, இயல்பைவிட இதயம் வேகமாக துடிப்பது போன்ற வீபரித சிக்கல்களுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப் படுகின்றனர். ஆகவே, இதுகுறித்து மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியதும், விழிப்புடன் செயல்பட வேண்டியதும் அவசியம் ஆகிறது. இவ்வாறான, பாதிப்புடன் வரும் வயதுடையவர்களுக்கு தடுப்பூசி செலுத்த வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்பதுதான் தற்போதைய கவலை.

தற்சமயத்தில், 45 வயதுக்கு மேற்பட்டவர்கள், சர்க்கரை நோய் உள்ளவர்கள், இதய நோய் பாதிப்பு இருப்பவர்கள் மற்றும் உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு மட்டும் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. மற்றவர்களுக்கு, இணை மருத்துவ சிகிச்சைகள் என்று சொல்லப்படும், பாராசிட்டமால், குறிப்பிட்ட இடைவேளையில் தண்ணீர் குடிப்பது போன்றவை எடுத்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. மேலும், உடல் நலம் சரியில்லா சமயங்களில் மற்ற பழக்க வழக்கங்களை தவிர்த்து விடுவது நல்லது. இதனாலும், தொற்று நோய் பரவுதலையும் தடுக்க முடியும்.

> “தடுப்பூசி போட்டபின் இரண்டு வாரங்களில் உடலின் நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகிவிடும். அதன்பிறகு தொற்று பாதித்தாலும், அதன் தீவிர தன்மை குறைந்து, சாதாரண உடல்வலி அல்லது காய்ச்சல் போல் வந்து சென்று விடும்.


Dr.வருண் சுந்தரமூர்த்தி


**Dr.நல்ல ஜி.பழனிசாமி,**
**தலைவர், கே.எம்.சி.ஹெச்**

### ஸ்டீராய்டு ஊசிகள் வேண்டாம்

உடல் வலி, தலைபாரம், மூக்கில் நீர் வடிதல், இருமல், காய்ச்சல், தொண்டையில் கரகரப்பு, தொண்டை சிவப்பது போன்ற அறிகுறிகள் தென்படும். தற்போது, வைரஸ் பாதிப்புடன் வருபவர்களுக்கு ரத்த பரிசோதனை செய்து பார்க்கையில், தட்டணுக்கள், வெள்ளை அணுக்கள் குறைந்து காணப்படும். இந்த அறிகுறிகளை ஆராய்ந்து சொல்லிவிடலாம் பன்றிக் காய்ச்சல் பாதிப்பா? இல்லையா என்று?. இந்த கிருமிக்கு பரிந்துரைக்கப்படும் மருந்தும், ஆன்ட்டிபயாட்டிக்ஸ் மருந்துக்கும் வேறுபாடு இருக்கிறது. மருத்துவர்கள் பரிந்துரைக்கும் ஆன்ட்டி வைரல் மருந்துக்ளை எடுத்துக் கொள்ளலாம். பன்றிக் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு ஸ்டீராய்டு ஊசிகள் போடக்கூடாது. மீறி செலுத்தினால், தொற்றின் வீரியம் அதிகரித்து உயிரிழப்பு அபாயம் நிகழ வாய்ப்புகள் அதிகம்.

கோவையில் அதிகரித்து வரும் இன்ஃப்ளூயென்சா ஃப்ளூ வைரஸ் பாதிப்புக்கு மக்கள் பயப்பட தேவையில்லை. சமூக இடைவெளியை கடைபிடிப்பது, மாஸ்க் அணிவது போன்ற நோய் தடுப்பு முறைகளை கடைபிடித்தால் போதும். இது நீண்ட நாள்போல் கொரோனா பாதிப்பாக இருக்காது. எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்களுக்கு இந்த பாதிப்பு ஏற்பட்டால், நுரையீரல் பாதிப்பு உண்டாகும்.




# வெரிகோஸ் வெய்ன் முகாம்

KMCH HEALTHCARE EXCELLENCE Since 1990

தேதி : 15.11.2023 முதல் 14.12.2023 வரை (விடுமுறை நாட்கள் தவிர) | நேரம் : 9 am - 3 pm

## கால் நரம்பு வீக்கம் நோய்க்கான அறிகுறிகள்

- கால் மற்றும் பாதத்தில் நரம்பு புடைப்பு, வீக்கம் மற்றும் நரம்பு சுருண்டிருத்தல்
- இரத்த நாளங்களிலிருந்து இரத்தம் வடிதல்
- நிற்கும்போதும், நடக்கும்போதும் அசௌகரியமாக உணர்தல்
- கால்களில் வலி, வீக்கம், நிறம் மாறுபட்டிருத்தல்
- அரிப்பு மற்றும் கால்களில் புண்

நுண்துளை சிகிச்சை மூலம் இதற்கு நிவாரணம் மற்றும் சிறப்புச் சலுகை கட்டணத்தில்* இச்சிகிச்சையை பெறலாம்.

50% சிறப்புச் சலுகை கட்டணத்தில்* ஆலோசனை மற்றும் டாப்ளர் ஸ்கேன்

*நிபந்தனைகள் பொருந்தும்

கோவை மெடிக்கல் சென்டர் & ஹாஸ்பிட்டல்
Accredited by NABH
99, அவிநாசி ரோடு, கோயமுத்தூர் - 641 014 | போன்: +91 422 4323 800 - 4000 / 680 3000 | www.kmchhospitals.com

முன்பதிவிற்கு அழைக்கவும் : 87548 87568

MAKING THE IMPOSSIBLE, POSSIBLE
Follow us on kmchhospitals.com



இதழாளர் கலைஞர் மலர் வெளியீடு விழாவில் பங்கேற்ற அமைச்சர்கள், சாமிநாதன், செஞ்சி மஸ்தான், மனோ தங்கராஜ் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலர் மோகன் ஆகியோர். உடன், கே. ஜி மருத்துவமனை தலைவர் டாக்டர். ஜி பக்தவத்சலம், கவிஞர் வைரமுத்து, நக்கீரன் கோபால், இந்துஸ்தான் கல்லூரி நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன், கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார், கோவை மாநகராட்சி மேயர் கல்பனா மற்றும் துணை மேயர் வெற்றிச்செல்வன், புலவர் செந்தலை கவுதமன், சிந்தனைக் கவிஞர் கவிதாசன் உள்ளிட்ட பலர்.

# லட்சியத்திற்காக எழுதினார் கலைஞர்

## இந்துஸ்தான் கல்லூரியில் இதழாளர் கலைஞர் விழாவில் கவிஞர் வைரமுத்து பேச்சு



இதழாளர் கலைஞர் மலரை வெளியிடும் கே. ஜி மருத்துவமனை தலைவர் டாக்டர். ஜி பக்தவத்சலம். அதனை பெற்றுக் கொள்ளும் இந்துஸ்தான் கல்லூரியின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன். உடன், கவிஞர் வைரமுத்து மற்றும் அமைச்சர்கள்.

✍ **ப.சுகன்யா,** தி கோவை மெயில்

தமிழ்நாடு அரசு சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் தமிழகத்திற்கும், தமிழக மக்களுக்காக ஆற்றிய அரும்பணிகள், பரிமாணங்களை போற்றும் வகையில் அவரின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் தமிழகம் முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக "இதழாளர் கலைஞர்" மலர் வெளியீடு மற்றும் கருத்தரங்கம் கோவை இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது.

இந்த விழாவில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சரும், "இதழாளர் கலைஞர்" நூற்றாண்டு விழா குழுவின் தலைவருமான சாமிநாதன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாட்டு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், பால்வளத்துறை அமைச்சரும், குழுவின் இணைத் தலைவருமான மனோ தங்கராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார், கோவை மாநகராட்சி மேயர் கல்பனா, துணை மேயர் வெற்றிச்செல்வன் உள்ளிட்டோர் பங்கேற்ற இவ்விழாவில் கவிபேரரசு வைரமுத்து சிறப்பு விருந்தினராக தலைமையேற்று நிகழ்ச்சியினை வழிநடத்தினார். இந்து என்.ராம், பர்வீன் சுல்தானா, புலவர் செந்தலை கவுதமன், நக்கீரன் கோபால், கவிஞர் கவிதாசன் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

### இதழாளர் கலைஞர் மலர் வெளியீடு

கருத்தரங்கின் சிறப்பு நிகழ்வான இதழாளர் கலைஞர் மலரை கோவை கே.ஜி மருத்துவமனையின் தலைவர் டாக்டர் ஜி.பக்தவத்சலம் வெளியிட்டார். அதனை இந்துஸ்தான் கல்வி நிறுவனங்களின் அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன் பெற்றுக் கொண்டார். முன்னதாக, மக்கள் செய்தி தொடர்பு மற்றும் அலுவலர் மோகன் வரவேற்று பேசினார்.

இதனைத்தொடர்ந்து, டாக்டர் ஜி. பக்தவச்சலம், தனக்கும் கலைஞர்க்கும் இருந்த நட்பை பற்றியும் நகைச்சுவையான கலந்துரையாடல்கள் பற்றிய நினைவுகளை பகிர்ந்து கொண்டார்.



- சரஸ்வதி கண்ணையன்

## வரலாறு படைத்த மேதை

வரவேற்புரையில் பேசிய இந்துஸ்தான் கல்வி நிறுவனங்களின் அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன், முத்தமிழறிஞர் கலைஞர் வரலாறு படைத்த மேதை. கலைஞர் என்றும் ஒளிமங்காத ஒளிரும் சூரியன் அவரின் "தமிழர்களே தமிழர்களே நீங்கள் என்னை கடலில் தூக்கி எரிந்தாலும் கட்டுமரமாக தான் மிதப்பேன் அதில் ஏறி நீங்கள் பயணம் செய்யலாம் கவிழ்ந்து விட மாட்டேன்" என்ற வரிகளுக்கு இணங்க தன் வாழ்நாள் வரை கலைஞர் வாழ்ந்தார் என்று பேசினார்.

## சமூகநீதி வென்றது தெற்கிலா - வடக்கிலா?



- கவிபேரரசு கவிஞர் வைரமுத்து

இக்கருதரங்கை தலைமையேற்று சிறப்புரையாற்றிய கவிஞர் வைரமுத்து பேசியதாவது: கலைஞர் கருணாநிதி, முதலமைச்சராக, எதிர்க்கட்சி தலைவராக, சட்டமன்ற உறுப்பினராக, முரசொலி ஆசிரியராக என பல பரிணாமங்களை கொண்டவர். இதற்கெல்லாம் முதன்மையாக தன்னை சிறந்த எழுத்தாளராகவும், பத்திரிக்கையாளராகவும் அடையாளப்படுத்திக் கொண்டவர். என் போன்றவர்கள் தொழில் முறை எழுத்தாளர்கள். ஆனால், கருணாநிதி தமிழ், தமிழ் மக்கள், கருத்துரிமை போன்ற லட்சியத்திற்காக எழுதியவர். நெஞ்சுக்கு நீதி என்ற தனது சுயசரிதை புத்தகத்தில் தமிழக வரலாறு, தமிழர்களின் வரலாறு, பண்பாடு, கலாச்சாரம், சமூக நீதி, அரசியல் போராட்டங்கள் என அனைத்தையும் உள்ளடக்கி 4,168 பக்கங்கள் கொண்ட சுயசரிதை எழுதிய ஒரே தலைவர். கலைஞர் செய்துவிட்டு போன வரலாற்று மாற்றம் எதுவென்றால், தொல்காப்பியத்தில் தமிழகத்தின் எல்லை தென்குமரி என்று குறிப்பிடப்பட்டது விவேகானந்தர் பாறை என்று மருவி ஆன்மீக அடையாளமாக பரவியது. இதனை மாற்றியமைக்க யோசனை செய்த பெரியாரின் பேரன், தெற்கு என்று சொன்னவுடன் தமிழ் கடவுளாம் ஞானக் கடவுள் திருவள்ளுவர் பெயர் சொல்ல வேண்டும் என்று குமரியில் திருவள்ளுவர் சிலையை தமிழகத்தின் எல்லையாக நிர்ணயித்து, பூகோளத்தை உறுதி செய்து விட்டு சென்றிருக்கிறார். சமூகநீதி வெற்றி பெற்றது தென் நாட்டிலா? வட நாட்டிலா? கேட்டால் பெரியார், அண்ணா, கலைஞர் ஆண்ட தென்நாட்டில் வென்றது என்று சொல்வேன் என்று பேசியவர்.,

தமிழ்நாட்டு பள்ளிகளில் சத்துணவு பரிமாறப்பட்டபோது சமபந்தி கடைபிடிக்கப்பட்டது, வடநாட்டில் சாதியம் கடைபிடிக்கப்பட்டது இதுவே தென் நாட்டில் சமூகநீதி வெற்றிபெற்றதற்கு சான்று என்று எடுத்துக் கூறினார். மேலும், பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகியோரின் படைப்புகளை இன்றைய நவீன தொழில்நுட்பத்தின் வழியாக அடுத்த தலைமுறைக்கு தமிழை கொண்டு செலுங்கள் என்று உரையாற்றினார்.

நிகழ்ச்சியின் முடிவில், கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## கருத்துரிமையும் கலைஞரும்




- நக்கீரன் கோபால்

நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய நக்கீரன் கோபால், கலைஞர் இல்லை என்றால் இன்று நான் இல்லை என்று தனக்கும் கலைஞர்க்கும் இடையில் இருந்த நட்பை குறித்து சில நினைவுகளை பகிர்ந்து கொண்டார். இதனைதொடர்ந்து பேசிய அவர், நமக்கு எல்லாம் முன்னோடி கலைஞர்.

தனது 13 வயதில் "செல்வ சந்திரா" " என்ற புதினத்தில், "தமிழ் வாழ்க தமிழர் வாழ்க" என்ற தலைப்பின் கீழ் திராவிட நாடு சாதிய அடிப்படையில் பிளவுபட்டு, மூட நம்பிக்கையில் சிக்கி தத்தளித்து கொண்டிருக்கிறது, தமிழ் மொழியை அழிக்க நடக்கும் சூழ்ச்சிகள் பற்பல என்று சிறுவயதிலேயே எழுதியவர்.

அன்று கலைஞர் எழுதியது இன்று நம் கண்முன்னே நடந்து வருவதை பார்க்கலாம். பள்ளி பருவத்திலேயே கட்சியை வழிநடத்தியவர். கலைஞரின் கருத்துரிமையினால் தான் நக்கீரன் தொடர்ந்து இயங்கி கொண்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்தினார்.


## கலைஞரின் இதழியல் தமிழ்



- புலவர் செந்தலை கவுதமன்

பல பரிமாணங்களுடன் இத்தகைய ஆற்றல் கொண்ட மனிதர் இருந்திருக்கிறார் என்றால் எதிர்கால உலகம் நம்ப மறுக்கும். அப்படிபட்ட அவரது முதல் முகம், முத்திரை பதித்த முகம் பத்திரிக்கையாளர் முகம். மிக சிறந்த இதழாளர் ஆக தன்னை பள்ளி பருவத்திலேயே அடையாளப்படுத்திக் கொண்டவர். தமிழ்தாய் வாழ்த்து பாடல் நடைமுறைக்கு 1970 ஆம் ஆண்டு வந்தது. அதனை நடைமுறை படுத்தியவர் கலைஞர். என்றுமே அவரின் முதல் வாசகமாக "தமிழ் வாழ்க" என்று இருக்கும் இல்லையெனில் "அன்பு கொள்க" என்றுதான் இருக்கும் என கலைஞர் கருணாநிதியின் இதழியல் பணிகள் குறித்து பேசினார்.

## ஓய்வறியாத சூரியன்



- சிந்தனைக் கவிஞர் கவிதாசன்

அலைந்து அலைந்து அழுத்துவிட்டேன் என்று அலை என்றாவது ஓய்வெடுத்தது உண்டா? அதுபோலவே முத்தமிழுக்காக மூழ்கி, மூழ்கி முதேடுத்த கலைஞர் தமிழ் மண்ணுக்காக பணியாற்றிய சேவைகள் பற்பல. அவரின் எழுத்துநடை, ஈர்ப்புநடை, அனைவரையும் கவர்ந்திழுக்க கூடிய நடையில் எண்ணற்ற நூல்களை இயற்றியிருக்கிறார் என்றவர்., கருணாநிதிக்கும் கோவைக்கும் உள்ள தொடர்பை குறிப்பிட்டு பேசினார்.

## தலைமுறைகள் கடந்த கலைஞர்




- பர்வீன் சுல்தானா

சுதந்திர தினத்தன்று முதலமைச்சர்கள் கோட்டையில் தேசிய கொடி ஏற்றலாம் என்ற உரிமையை வாங்கி கொடுத்தவர் கலைஞர். அதுமட்டுமின்றி, தமிழ்நாடு காவல்துறையில் முதல் முதலாக பெண்களை பணியமர்த்திய கலைஞர் பெண்ணுரிமைக்காக கடைசி வரை குரல் கொடுத்தார். ஆசியாவின் மிகப்பெரிய நூலகமான அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியவர். இந்தியாவில் முதல் முறையாக அம்பேத்கர் பெயரில் சட்டக் கல்லூரி மற்றும் சட்ட பல்கலைக்கழகத்தை கலைஞர் நிறுவினார். தமிழுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் இவர் ஆற்றிய தொண்டின் காரணமாகவே அவரின் 60 ஆண்டு கால அரசியல் வாழக்கையில் ஒரு முறை கூட மக்கள் தோற்கடிக்கவில்லை என்று கலைஞரின் சமூகத் தொண்டு மற்றும் தமிழ் தொண்டு குறித்து உரையாற்றினார்.

# சிகரம் தொட்ட மாமனிதர்!

## டாக்டர். பக்தவத்சலம்

✍ ப.சுகன்யா, தி கோவை மெயில்



பள்ளி பருவத்தின் போதே மருத்துவர் ஆக வேண்டும், கலெக்டர் ஆக வேண்டும் என மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் எதிர்காலம் குறித்து ஒரு கனவு இருக்கும். அதேவேளையில் பெற்றோர்கள் பலரும் தங்களது குழந்தைகளை நன்றாகப் படிக்க வைத்து டாக்டராகவோ, பொறியாளராகவோ ஆக்க வேண்டும் என்ற ஆசையும், கனவும் இருப்பது உண்டு. ஆனால் கே.ஜி. மருத்துவமனை டாக்டர் ஜி பக்தவச்சலம் மருத்துவரான வரலாறு அப்படி அல்ல. பக்தவத்சலம் இரண்டு வயது குழந்தையாக இருக்கும் பொழுது அவர் தந்தை கே.கோவிந்தசாமி நாயுடு “டாக்டர் கனவு” கண்டு விட்டார்.

கே.கோவிந்தசாமி நாயுடுக்கு கோவையில் இருந்து 30 கிலோமீட்டர் தொலைவில் உள்ள அன்னூர் தான் சொந்த ஊர். பெரிய வளமான குடும்பம் இல்லை. கோவிந்தசாமி நாயுடுவுக்கு மளிகை கடையில் வேலை, மாதம் ஒன்பது ரூபாய் சம்பளம். ஐந்து மகன்கள், இரண்டு மகள்கள் என்று ஏழு குழந்தைகள். இதில் இரண்டாவது மகன்தான் பக்தவத்சலம். பெரிய குடும்பம். மளிகைக்கடை வேலையில் பெறும் சம்பளம் குடும்பத்தைக் கவனிக்கப் போதவில்லை. பிறகு கான்ட்ராக்ட் வேலைக்கு மாறிய கோவிந்தசாமி நாயுடு ஒரு கட்டத்தில் ஜின்னிங் பேக்டரியையும் தொடங்கி நடத்தினார்.

### மருத்துவம் படிக்க சென்னை சென்றது

பக்தவத்சலம் எட்டாவது படித்துக் கொண்டிருக்கும் பொழுது அவருடைய அம்மா ருக்மணி கால் தவறி கிணற்றில் விழுந்து விட்டார். தலை, முதுகு என்று பலமாக அடிபட்டு ஆறு மாத மருத்துவமனை வாழ்க்கையைக் கழித்தார். அப்போது, கோவிந்தசாமி தன்னுடைய மகன் ஜி.பக்தவத்சலத்திடம் “நீ நல்லா படிச்சு பெரிய டாக்டராகி, நிறைய பேருக்கு சிகிச்சை தரணும்” என்று மீண்டும் ஒருமுறை உரக்கச் சொன்னார். அது மாணவனாக இருந்த பக்தவத்சலத்தின் மனதில் நன்கு பதிந்தது.

அதன் பிறகு நடந்ததெல்லாம் வரலாறு. பியுசியில் நல்ல மார்க், மருத்துவம் படிக்க இன்டர்வியூக்கு சென்னை சென்றது, வெற்றிகரமாக படிப்பை முடித்து சென்னையிலேயே கொருக்குப் பேட்டையில் ஒரு சின்ன கிளினிக்கை தொடங்கினார். கிளினிக்கை பெரிய அளவில் அவரால் தொடர முடியவில்லை. நேரத்தை வீணாக்காமல், மருத்துவ மேற்படிப்பு எம்.எஸ். படிக்கச் சென்றார். இதற்கிடையில் உறவுக்காரரான தனலட்சுமியுடன் திருமணம் நடந்தது. குழந்தைகள் வசந்தி, அசோக் பிறந்தார்கள்.

அப்பொழுது அவருக்கு அரசு மருத்துவமனையில் பணிவாய்ப்பு வந்தது. அதனை நல்வாய்ப்பாக மாற்ற போராடி ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்ந்தார். அங்கு பெற்ற பயிற்சி, பக்தவத்சலத்தை பெரிய அறுவை சிகிச்சை நிபுணராக உருவாக்கியதோடு, அவர் பல நிபுணர்களை உருவாக்கவும் வழி வகுத்தது.

### அமெரிக்காவில் பணி., தாயகம் திரும்புதல்

பிறகு சென்னையிலிருந்து கோவை மருத்துவமனைக்கு மாற்றலாகி வந்தார். அப்போது அமெரிக்க மருத்துவ மனையில் பணிபுரியும் வாய்ப்பு வந்தது. அப்பாவிடம் பெற்ற பணத்தோடு, மனைவியின் தங்கச் சங்கிலி விற்று அமெரிக்கா சென்று பணியில் இணைந்தார். பிறகு குழந்தைகள் மனைவி அமெரிக்கா சென்றார்கள். நல்லபடியாக வாழ்க்கை சென்று கொண்டிருந்தது.

ஒரு நாள் இரவு. டாக்டர் பக்தவத்சலத்தின் அம்மா போன் செய்தார். “ஏங்கண்ணு, எங்களுக்கும் நம்ம ஊர்க்காரர்களுக்கும் மருத்துவம் பாக்கணும் தானே உங்க அப்பா உன்னை டாக்டருக்கு படிக்க வச்சாரு, ஆனா நீ அமெரிக்கா போய்விட்டாய்! இரவெல்லாம் அப்பா உன் பெயரை சொல்லிக் கொண்டே இருக்கிறார். நீ ஊருக்கே திரும்பி வந்துடு கண்ணு” என்றவரின் குரலில் இருந்த பாசமும் அன்பும் பக்தவத்சலத்தின் மனதை உருக்கியது. தனது தாயின் அன்பிற்கு கட்டுப்பட்டு ஒரே முடிவாக அமெரிக்காவில் இருந்து கோவை திரும்ப வந்துவிட்டார்.

அப்பொழுதுதான் சொந்த மருத்துவமனை கட்டலாம் என்ற எண்ணம் உருவானது. தற்போது கே. ஜி. மருத்துவமனை உள்ள 50 சென்ட் இடத்தை வாங்கினார்கள். வட்டிக்கு பணம் வாங்கி மருத்துவமனை கட்டிடம் எழுந்தது. ஒரு எக்ஸ்ரே மெஷின், ஒரு இசிஜி மெஷின், சிறிய ஆப்ரேஷன் தியேட்டர் என்று சாதாரணமாக தொடங்கிய மருத்துவமனை, இன்று ஆலமரமாக கிளை பரப்பி நிற்பதற்கு காரணம் பக்தவத்சலத்தின் தளராத உழைப்பும் மருத்துவ துறை சார்ந்த அறிவுத்திறனும் என்றால் அது மிகையாகாது. ஒரு டாக்டர், ஒரு நர்ஸ், பத்து படுக்கைகள் என்று தொடங்கிய கேஜி மருத்துவமனை, இன்று 300 படுக்கை வசதி கொண்டதாக வளர்ந்துள்ளது. மல்டி ஸ்பெஷாலிட்டி, சூப்பர் ஸ்பெஷாலிட்டி என்று பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. இன்று 175 டாக்டர்கள், 75 முதல் நிலை பயிற்சி மருத்துவர்கள், 500 செவிலியர்கள், 200 தொழில்நுட்ப பணியாளர்கள் என்று 1500 க்கும் மேற்பட்டவர்கள் நேரடியாகப் பணியில் உள்ளனர். இது போக ஆயிரம் பேருக்கு மேல் கேஜி கல்வி நிறுவனங்களில் மருத்துவம் சார்ந்த கல்வி கற்கிறார்கள்.

### பொன் விழா சேவை தரும் பொன்னான கரங்கள்

கோவையில் குண்டுவெடிப்பு நடந்த பொழுது அனைத்து மருத்துவமனைகளும் மூடப்பட்டன. ஆனால், கே. ஜி மருத்துவமனை மட்டும் முன்வந்து சுமார் 250 பேருக்கு சிகிச்சை வழங்கியது. கும்பகோணம் தீ விபத்து, குஜராத் பூகம்பம், கஜா புயல், கேரளா மழை வெள்ள பாதிப்பு என்று பாதிக்கப்பட்ட பலருக்கும் கே.ஜியின் மருத்துவ சேவை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கெல்லாம் காரணம் பக்தவத்சலம் என்கிற தனி மனிதருடைய உழைப்பு, தன்னம்பிக்கை, தன்னலமற்ற எண்ணம், அடுத்தவருடன் இணைந்து இயங்கும் விதம், தான் கற்றுக் கொள்வதோடு குடும்பத்தினர் ஒத்துழைப்பு ஆகியன என்று கூற வேண்டும். அதற்கு எல்லாம் மேலாக அவருக்கு சமூகத்தின் மேல் உள்ள அக்கறையாகும். இன்றும் தினந்தோறும் புத்தகங்கள் படிக்கும் வழக்கம் உள்ள பக்தவத்சலம் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் சமூகத்துக்கு ஆரோக்கியமான நலம் தரும் கருத்துக்களை சமூக ஊடகங்கள் மற்றும் செய்திதாள்கள் மூலம் சொல்ல தவறியதே இல்லை.

### நூல் ஆசிரியராக பரிமாணங்கள்

இதயம் ஒரு கோயில், மனசை மனசே, உயிரே உயிரே, நெஞ்சே நெஞ்சே அன்பே அன்பே, ஆனந்தம் பேரானந்தம், பல்லாண்டு பல்லாண்டு, காதல் காதல் போன்ற மக்களுக்கு வழிகாட்டும் பயனுள்ள 17 புத்தகங்களை எழுதியுள்ளார்.

> “ கே.ஜி.கலாம் லிட்டில் ஹார்ட்ஸ் அறக்கட்டளை மூலம், 500க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு இலவச இதய அறுவை சிகிச்சைகளை மருத்துவர்கள் செய்துள்ளனர். கிராமப்புறங்களில் 8,632 இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு சுமார் 16,59,604 பேருக்கு இலவச பரிசோதனை நடத்தி உள்ளனர்.

இன்றும் காலை 7 மணிக்கே மருத்துவமனைக்கு சென்று டாக்டர்களுக்கு சொல்லி கொடுக்கிறார். வெறும் மருத்துவம், நிர்வாகம், மட்டுமல்லாது வாழ்வியலும் கற்றுக் கொடுக்கிறார். அதற்காக தினந்தோறும் படித்துக் கற்றுக் கொண்டிருக்கிறார். ஒரு சமூக அக்கறை கொண்ட மருத்துவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கிறார்.

### விருது வழங்கி பாராட்டிய மத்திய அரசு

தலைமை பண்புக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக திகழும் இவர் சோர்வில்லாமல் இன்றுவரை சுறுசுறுப்பாக செயல்பட்டு வருகிறார். இவரின் அயராத மருத்துவ சேவை, பொது நலம் சார்ந்த சமூக பங்களிப்பை பார்த்து வியந்து பாராட்டாதவர்கள் எவரும் இல்லை. விருதுகள் பல பெற்று சிகரம் தொட்ட மாமனிதர்.

ஆளுநர், இந்திய குடியரசுத் தலைவர், இந்திய பிரதமர், தமிழக முதல்வர் வரை இவருக்கு விருதுவழங்கி கௌரவித்துள்ளனர். 1984 ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தியிடமிருந்து மருத்துவ துறையில் உயரிய விருதாக கருதப்படும் பி .சி. ராய் விருது பெற்றார். தொடர்ந்து, அமெரிக்கா, லண்டன் போன்ற நாடுகளில் பயன்பாட்டில் இருக்கும் மருத்துவ தொழில்நுட்ப உபகரணங்களை தனது மருத்துவமனையில் நிறுவி மகத்தான சிகிச்சை வழங்க முன்னெடுக்கும் பக்தவத்சலத்தின் மருத்துவ சேவையை கண்டு பாராட்ட விரும்பிய மத்திய அரசு 2005 ஆம் ஆண்டு ”பத்ம ஸ்ரீ” விருது வழங்கி பெருமைப்படுத்தியது. அன்றைய குடியரசு தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமிடமிருந்து பத்மஸ்ரீ விருதினை பெற்றார். இவரின், துடிப்பான பேச்சாற்றல், உயர் சிந்தனை கனவுகளை ரசித்த அப்துல் கலாம், தனது இந்தியா 2020 புத்தகத்தில் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்.

மேலும், முன்னாள் இந்திய குடியரசு தலைவர் வெங்கையா நாயுடுவிடம் இருந்து சிறந்த ஆசிரியர் விருது பெற்றார். தொடர்ந்து, தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் ஹெல்த்கேர் ஐகான் ஆஃப் தி இயர் விருதினை வழங்கி கவுரவப்படுத்தினார்.

### இலக்குகளில் மட்டுமே கவனம்., இதுவே இவரின் தனித்துவம்

கோயம்புத்தூரில், விபத்தில் காயமடைந்தவர்களை சிகிச்சைக்கு அனுமதித்தது மட்டுமல்லாமல், மெடிக்கல் லீகல் கேஸ்களை அட்மிட் செய்து சிகிச்சை அளித்த முதல் மருத்துவமனை. அந்த அளவுக்கு மருத்துவர் என்ற கடமை நெறியுடன் செயல்பட்டார், செயல்பட்டும் வருகிறார். சிறந்த அறுவை சிகிச்சை நிபுணரான பக்தவத்சலம், முன்னாள் முதல்வர் கருணாநிதி போன்ற அரசியல் தலைவர்கள், சிவாஜி கணேசன், கண்ணதாசன் போன்றவர்களுக்கு சிகிச்சை அளித்திருக்கிறார்.

ஆரம்பம் முதலே மருத்துவத்தின் எல்லைகளைத் தாண்டி கே. ஜி.மருத்துவமனை புதியதோர் மைல் கல்லை எட்ட வேண்டும் என்ற தீரா ஆசை கொண்ட அவரின் வேகமும், விவேகமும் கே. ஜி மருத்துவமனையை “சென்டர் ஆஃப் எக்ஸலென்ஸ்” என்று சொல்லும்படி உருவாக்கி இருக்கிறார்.

கே.ஜி ஹாஸ்பிடலில் 128 ஸ்லைஸ் சிடி ஸ்கேனரை நிறுவி ஆசியாவின் முதல் மருத்துவமனை என்ற பெயரை பெற்றது மட்டுமல்லாமல் இதுவரை 2 லட்சம் பேருக்கு மேல் ஸ்கேன் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சாதனையோடு நின்று விடாமல், 5 வகை இதயக் குறைபாடுகள் உள்ள சிறுமிக்கு மருத்துவ வரலாற்றில் முதல் முறையாக மிகவும் அரிதான இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டதும், இந்தியாவில் முதன்முறையாக பிறந்து 2 நாட்களே ஆன குழந்தைக்கு டயாலிசிஸ் செய்து அசத்தியதும், ராணுவ வீரருக்கு மூன்று முறை சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்தது என சாதனை பட்டியல்கள் எண்ணில் அடங்காதவை.

இத்தகைய சாதனைகள் மூலம் கே. ஜி மருத்துவமனையை இந்தியா முழுவதும் அடையாளப்படுத்தி தனது தந்தையின் கனவை நனவாக்கியவர் ஒருபடி மேலே சென்று உலகம் அறியும் வகையில் வயர்லெஸ் டிரான்ஸ்யூசர்களுடன் கூடிய உலகின் முதல் 4டி அல்ட்ராசவுண்ட் சிஸ்டம் கே. ஜி ஹாஸ்பிடலில் நிறுவி மைல்கல் சாதனை படைத்தார். இதன் பிறகும் சாதனை தாகம் தணியவில்லை. கோயம்புத்தூரில் தற்சமயம் குறைந்த அளவிலான இதய அறுவை சிகிச்சைகள் செய்யப்படும் முதல் மற்றும் ஒரே மருத்துவமனை கே.ஜி ஆகும். இதுவரைக்கும் 200 க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சைகள் செய்து 100 சதவீத வெற்றி விகிதத்துடன் இயங்கி வரும் மருத்துவமனையாக திகழ்கிறது.மேலும், கோவையில் அதிநவீன ஆம்புலன்ஸ் ரெஸ்பான்டர் மற்றும் அவசரகால சேவைகளை அறிமுகப்படுத்திய முதல் மருத்துவமனை.

### சமூக பொறுப்பில் கே. ஜி மருத்துவமனை

முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாமால் தொடங்கப்பட்ட கேஜிகலாம் லிட்டில் ஹார்ட்ஸ் அறக்கட்டளை மூலம், 500க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு இலவச இதய அறுவை சிகிச்சைகளை மருத்துவர்கள் செய்துள்ளனர். தமிழக அரசின் உன்னதத் திட்டத்தின் கீழ் இதய குறைபாடுள்ள 450 ஏழைக் குழந்தைகளுக்கு அதிக மானிய விலையில் அறுவை சிகிச்சை செய்தது, மேலும் தமிழக அரசுடன் இணைந்து 1600க்கும் மேற்பட்டோருக்கு இலவச இதய அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன.

கே.ஜி கண் மருத்துவமனையில் கிராமப்புறத்தில் பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்களுக்கு கண்புரையை அகற்றும் 85,000ம் இலவச இண்டரா ஆகுலர் லென்ஸ் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு இருக்கிறது. மேலும், தலசீமியா நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஒவ்வொரு மாதமும் 100 யூனிட் ரத்தம் இலவசமாக வழங்கப்படுகிறது.

அதோடு, இலவச பிபி கிளினிக் மூலம் 6,00,000 பேருக்கு மேல் உயர் ரத்த அழுத்த பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அறக்கட்டளை சார்பில் நடத்தப்படும் பொது நிகழ்ச்சிகள் வழியாக மூன்று ஆயிரத்துக்கும் அதிகமான இலவச டயாலிசிஸ் சிகிச்சைகள் செய்யப்படுகிறது.

இந்த திட்டம் இன்று வரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பது சிறப்பம்சம். இதில் குறிப்பிடத்தக்க விசயம் என்னவென்றால் கிராமப்புறங்களில் 8,632 இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு சுமார் 16,59,604 பேருக்கு இலவச பரிசோதனை நடத்தி உள்ளனர்.

### ரத்த அணுக்களில் கலந்திருக்கும் கே.ஜி மருத்துவமனை

தேனீ எவ்வாறு சுறுசுறுப்பாக உழைக்கிறதோ அதுபோலவே பக்தவத்சலம் உத்வேகத்துடன் உழைத்து கொண்டிருக்கிறார். அவரின் ரத்த அணுக்களில் கே.ஜி மருத்துவமனையை அடுத்தடுத்த நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணங்கள் மட்டுமே மேலோங்கி இருக்கிறது. தேனீக்கள் தங்களது கூட்டை கட்டுகையில் ஒரு மில்லிமீட்டர் இடத்தைக் கூட வீணடிக்காது.

அதுபோலவே கே.ஜி மருத்துவமனையை சிறந்த மருத்துவர்கள், செவிலியர்கள், இதர பணியாளர்களை கொண்டு சிதறாமல் செதுக்கி இருக்கிறார். ஆல் போல் தழைத்து நிற்கும் கே.ஜி மருத்துவமனை பொன்விழா ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

நேர்மறை ஆற்றலை இயல்பாகவே தன்னிடம் வைத்திருக்கும் பக்தவத்சலம் தன் வாழ்நாள் முழுவதும் கே.ஜி மருத்துவ சேவையின் வழியில் மக்களின் கரங்களை இறுக்கப்பற்றிக் கொண்டு மகத்தான மாணிக்கமாக மிளிர்கிறார்.



முன்னாள் பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தியிடமிருந்து டாக்டர். பி.சி.ராய் விருது.


முன்னாள் தமிழக ஆளுநர் ரோசய்யாவிடம் இருந்து விருது பெறுகிறார்


முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர்.ஏ.பி.ஜே.அப்துல் கலாமிடம் இருந்து “பத்மஸ்ரீ விருது”


முன்னாள் துணை குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடுவிடமிருந்து எமரிட்டஸ் ஆசிரியர் விருது.


தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் இருந்து ஹெல்த்கேர் ஐகான் ஆஃப் தி இயர் - தேசிய விருது.

## கே.ஜி யின் தாரக மந்திரம்...

- நோயாளிகளின் நன்மைக்காக பணி புரிகின்றோம்.
- நோயாளிகளின் துயர் நீங்குவதற்காக எந்நேரமும் சிறந்த முறையில் சிகிச்சை அளிப்போம்.
- விலை மதிப்பல்லாத உயிரைக் காப்பாற்ற மனம் தளராமல், உண்மையுடன் பணி புரிவோம்.
- நோயாளிக்கும். நோயாளியின் உறவினர்க்கும் எப்பொழுதும் மனத்திருப்தி அடையுமாறு பணிபுரிவோம்.
- இப்புனிதமான பணியினை மகிழ்ச்சியுடன்' செய்வோம்.
- இந்த நல்ல நோக்கம் நிறைவேறுவதற்காக மருத்துவர் அல்லாத மற்ற அனைவரும் மருத்துவர்களுடன் ஒரு குழுவாக இணைந்து ஒற்றுமையாக அயராது பணி செய்வோம்.
- தொடர் கல்வியின் மூலம் நோயற்ற வாழ்வு வாழ மக்களுக்கு கற்றுக் கொடுப்போம்.
- நவீன கருவிகளின் மூலம் நோயை. விரைவாக கண்டறிந்து, நோயாளிகளுக்கு தரமான சிகிச்சை அளிப்போம்.
- நோயாளிகளை உறவினராகக் கருதி தனிக்கவனம் செலுத்து வோம்.
- மருத்துவக் குழு பணியாற்று வதற்கு நல்ல சூழ்நிலையை உருவாக்குவோம்.
- உலகத்தரமான மருத்துவ சிகிச்சையை முழு ஈடுபாட்டுடன் நாங்கள் ஒருங்கிணைந்த ஒரு குழுவாக அதிநவீன மருத்துவ தொழில் நுட்பத்தை கொண்டு நோயாளிகளின் திருப்திக்காக பாடுபடுவது.
- இங்கு பணிபுரியும் தொழிலாளர்களின் சாதனைகளை முறையாக அங்கீகரித்து அவர்களுக்கு நல்ல பணிபுரியும் சூழலை உருவாக்கி தருவது.


ஏபிஜே அப்துல் கலாம் அறக்கட்டளையின் சார்பில் குழந்தைகளுக்கான இலவச இதய அறுவை சிகிச்சை 2008



கே.ஜி. கண் மருத்துவமனையில் இலவச கண் அறுவை சிகிச்சை செய்து கொண்ட நோயாளிகளுடன் ஏ.பி.ஜே. அப்துல் கலாம். உடன், அசோக் ஜி.பக்தவத்சலம் மற்றும் மருத்துவ குழுவினர்.


கோவை வெடிகுண்டு தாக்குதலில் பாதிக்கப்பட்ட 250 பேருக்கு கே.ஜி.மருத்துவமனையில் சிகிச்சை


> “பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்களுக்காக கே.ஜி கண் மருத்துவமனையில் கண்புரையை அகற்றும் 85,000ம் இலவச இன்ட்ரா ஆக்குலர் லென்ஸ் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன. இந்த மகத்தான சேவையை பாராட்டி 2005 ஆம் ஆண்டு ''பத்ம ஸ்ரீ'' விருது வழங்கி மத்திய அரசு பெருமைப்படுத்தியது.


தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் கொரோனா நிவாரண நிதி ரூ.1கோடி வழங்கிய டாக்டர்.ஜி.பக்தவத்சலம், அசோக் பக்தவத்சலம், வசந்தி ரகு.


இலவச இருதய அறுவை சிகிச்சை பெற்ற குழந்தைகளுடன் டாக்டர்.ஜி.பக்தவத்சலம் 2008.

## உயர்வுக்கு வித்திட்டவர்கள்...

**டாக்டர் பக்தவத்சலம் என்ற தனிமனிதனின் வெற்றிக்கு பக்கபலமாக இருந்து, அவரின் உயர்வுக்கு வழிநடத்தியவர்களில் அவரது குடும்பத்தினரின் பங்கு இன்றியமையாதது ஆகும்.**


தந்தை
அன்னூர் தர்மவீர
கே கோவிந்தசாமி நாயுடு


தாயார்
ருக்மணியம்மாள்

> **“ஏங்கண்ணு, எங்களுக்கும் நம்ம ஊர்க்காரர்களுக்கும் மருத்துவம் பாக்கணும் தானே உங்க அப்பா உன்னை டாக்டருக்கு படிக்க வச்சாரு, ஆனா நீ அமெரிக்கா போய்விட்டாய்! இரவெல்லாம் அப்பா உன் பெயரை சொல்லிக் கொண்டே இருக்கிறார். நீ ஊருக்கே திரும்பி வந்துடு கண்ணு'' என்றவரின் குரலில் இருந்த பாசமும் அன்பும் பக்தவத்சலத்தின் மனதை உருக்கியது. தனது தாயின் அன்பிற்கு கட்டப்பட்டு ஒரே முடிவாக அமெரிக்காவில் இருந்து கோவை திரும்ப வந்துவிட்டார்.**



# ஃப்ளு வைரஸ் காய்ச்சல் :


# தடுப்பூசி போட்டுக்கொண்டால் தப்பித்துவிடலாம்

**மருத்துவர் கிருஷ்ணசாமி, குழந்தை மருத்துவ ஆலோசகர், ராவ் மருத்துவமனை**

✍ வெ.சீ.அனிஷா

பருவ மழை தொடங்கி இருக்கும் இந்த நேரத்தில் ஃப்ளு காய்ச்சல் அதிகளவில் பரவி வருகிறது. மழைகாலங்களில் நோய்தொற்று பரவுவது இயல்பு என்றாலும் அதிகளவில் பரவுவது மக்களிடையே கூடுதல் அச்சத்தை ஏற்படுத்துகிறது.

அதன் வகையில் ஃப்ளு வைரஸ் பாதித்தால் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து ராவ் மருத்துவமனையின் குழந்தை மருத்துவ ஆலோசகர் மற்றும் நியோனாட்டாலஜிஸ்ட் டாக்டர் கிருஷ்ணசாமி ஆலோசனை வழங்குகிறார்.



**ஃப்ளுவை கண்டு பதற்றம் வேண்டாம் :**

இன்ஃப்ளுயன்ஸா என்பது பொதுவாக ஃப்ளு வைரஸ் என்று அழைக்கப்படுகிறது. இது புதுவிதமாக வரும் நோய் இல்லை, சீசனல் ஃப்ளு என்று சொல்லப்படும் இந்நோயானது ஆண்டுதோறும் நவம்பர் மாதம் தொடங்கி மார்ச் மாதம் வரை நீடிக்கும். இந்த காய்ச்சலானது இருமல் மற்றும் தும்புவதால் காற்று மூலம் எளிதில் பரவும். இதில் அதிகளவில் பரவக்கூடியது சீசனல் ஃப்ளு ஆகும். ஆண்டுதோறும் இயல்பாக வரக்கூடிய இந்த சீசனல் ஃப்ளுவை கண்டு மக்கள் பதற்றமடைய வேண்டாம் என்றார்.

**பாதிப்புகள்:**

காய்ச்சல், சளி, மூக்கில் நீர் வடிவது, தொண்டையில் கரகரப்பு, உடல் சோர்வு உடல் வலி ஆகியவை ஃப்ளுவின் முக்கிய அறிகுறிகளாக கருதப்படுகிறது. பொதுவாக இக்காய்ச்சல் ஒரு வாரம் நீடிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஃப்ளு காய்ச்சலானது பெரும்பாலும் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும், 60 வயதிற்கு மேல் உள்ள முதியவர்களுக்கும் அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்தும். இதுமட்டுமின்றி, புற்றுநோய் மற்றும் ஆஸ்துமா உள்ளவர்களுக்கு இந்நோய் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது. அவர்கள் ஃப்ளு நோயாளிகளிடம் இருந்து தங்களை தனிமைப்படுத்தி கொண்டு, கட்டாயம் முகக்கவசம் அணிந்து கொள்ள வேண்டும்.

**தடுப்பூசி தேவை :**

ஃப்ளு காய்ச்சலில் இருந்து குழந்தைகளை பாதுகாப்பதற்கு தடுப்பூசி எடுத்துக்கொள்ள வேண்டும். பொதுவாக இந்த தடுப்பூசியை ஆகஸ்ட் மாதத்தில் செலுத்தப்படும். ஏனெனில் அதன் வீரியம் வெளிப்பட 2 முதல் 3 வாரங்கள் ஆகும். இதனால் பருவக்கால பாதிப்பிலிருந்து குழந்தைகளை பாதுகாத்து கொள்ள முடிகிறது. இத்தகைய தடுப்பூசியை போடுவதற்கு பெற்றோர்கள் மறந்திருந்தால், இதற்கான உரிய மருந்துகளும் கிடைக்கின்றன. அதனை மருத்துவரின் ஆலோசனை படி எடுத்துக்கொள்ளலாம். மேலும், நீரிழிவு நோய், இதய நோய்கள், சிறுநீரக நோய்கள், நுரையீரல் நோய்கள், புற்றுநோய் மற்றும் நோயெதிர்ப்பு சக்தி குறைபாடு உள்ளவர்களுக்கு தடுப்பூசி முக்கியமானது என்று பரிந்துரைக்கிறார்.

**தனிமைப்படுத்தி கொள்ள வேண்டும்;**

ஃப்ளு காய்ச்சலுக்கான அறிகுறி இருந்தால் முதலில் உங்களை தனிமைப்படுத்தி கொள்ளுங்கள். வெளிப்புறத்தில் இருப்பவர்கள் குறைந்தபட்சம் 1 மீட்டர் தொலைவில் விலகி இருக்க வேண்டும். முடிந்த வரை வீட்டிலேயே இருந்து நன்குஓய்வெடுங்கள். வெளியில் செல்லும்போது முகக்கவசம் அணிந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும். இதற்கான ஆன்டி ஃப்ளு என்ற மருந்தை ஆரம்ப நிலையிலேயே எடுத்துக்கொள்வது சிறந்தது.

**கர்ப்பிணி பெண்களின் பாதுகாப்பு:**

இந்த ஃப்ளு காய்ச்சலானது அனைவரையும் பாதிக்கக் கூடியது. எனவே, வைரஸ் தடுப்பு மருந்துகளை எடுத்துக் கொள்வது சிறந்தது. குறிப்பாக கர்ப்பிணி பெண்கள் பாதுகாப்பாக இருக்க கட்டாயம் இதற்கான தடுப்பூசியை எடுத்து கொள்ளவது முக்கியம். மேலும், வைட்டமின் சி, புரதச்சத்துக்கள் மற்றும் தாதுக்கள் நிறைந்த உணவுகளை உட்கொள்வதோடு சூடான திரவங்களை எடுக்கொள்வது நோய் பாதிப்பிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள உதவுகிறது.

> **புற்றுநோய் மற்றும் ஆஸ்துமா உள்ளவர்கள் ஃப்ளு நோயாளிகளிடம் இருந்து தங்களை தனிமைப்படுத்தி கொண்டு, கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும்.**



## இந்துஸ்தான் கல்லூரியில்

# மின்சார வாகன தயாரிப்பு மையம்



மின்சார வாகன தயாரிப்புக்கான மையத்தை தொடங்கி வைக்கிறார் சிறப்பு விருந்தினர் டிவைஸ் எலக்ட்ரானிக்ஸ் நிர்வாக இயக்குநர் சேகர் மலானி. அருகில் ஹரிதா மொபிலிட்டி நிர்வாக இயக்குநர் பிரசாந்த் குமார், கல்லூரி தலைமை நிர்வாக அதிகாரி கருணாகரன், முதல்வர் ஜெயா உள்ளிட்டோர்.

✍ தி கோவை மெயில்

இந்துஸ்தான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் மின்சார வாகனத்திற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையத்தின் துவக்கவிழா வியாழக்கிழமை நடைபெற்றது.

இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக டிவைஸ் எலக்ட்ரானிக்ஸ் நிர்வாக இயக்குநர் சேகர் மலானி கலந்து கொண்டு மின்சார வாகன மையத்தைத் துவக்கி வைத்தார். அவர் பேசுகையில், 2030 வருடத்தைக் கணக்கிடும்போது மின்சார வாகனங்களைப் பற்றிய பேட்டரி, மோட்டார், வாகன மென்பொருள் குறித்து நன்கு தெரிந்த வல்லுநர்கள் அதிகம் தேவைப்படுகின்றனர். அதன் வகையில் இம்மையமானது மின்சார வாகன தொழில்நுட்பத்தில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், திறனை மேம்படுத்துவதற்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று கூறினார்.

இதை தொடர்ந்து, ஹரிதா மொபிலிட்டி நிர்வாக இயக்குநர் பிரசாந்த் குமார் பேசுகையில், மின்சார வாகனத்தின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் மின்சார வாகனங்களில் ஏற்படும் பழுதை எவ்வாறு திறம்படக் கையாளுவது என்பதை மாணவர்களுக்கு இத்திறன் மேம்பாட்டு மையத்தின் மூலம் பயிற்சிகள் கொடுக்கப்படும். மேலும் மாணவர்களுக்கு இன்டெர்ன்ஷிப், ப்ராஜெக்ட் ஆகியவையும் வழங்கப்பட உள்ளன என்று கூறினார் .

மேலும், கல்லூரியின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி பேசுகையில்; நவீன தொழில்நுட்பத்தைச் செய்முறை பயிற்சியின் மூலம் மாணவர்கள் பயன்பெற வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு இம்மையம் துவக்கப்பட்டது என்று கூறினார்.

விழாவிற்கு கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி கருணாகரன், முதல்வர் ஜெயா, டீன் மகுடேஸ்வரன், பேராசிரியர்கள் மற்றும் அனைத்து மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# கோவை விழாவின் 16வது பதிப்பு அறிமுகம்




கோயம்புத்தூர் விழாவின் 16வது பதிப்பிற்கான அறிமுக நிகழ்ச்சி கோவை தினத்தன்று நடைபெற்றது, அதன் வகையில் 2024 ஆம் ஆண்டின் கோயம்புத்தூர் விழா ஜனவரி 2 முதல் 8 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதில் கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார், மாநகர காவல்துறை ஆணையர் பாலகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், கோவை விழா தலைவர் ராகுல் கமத் மற்றும் பல முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டு விழாவின் 16வது பதிப்பைத் தொடக்கி வைத்தனர். மேலும், கோயம்புத்தூர் விழாவின் 16வது நிகழ்வு கொண்டாட்டங்களில் 15 முக்கிய நிகழ்வுகளுடன் 100க்கும் மேற்பட்ட நிகழ்வுகள் கோவை நகரத்தின் பல்வேறு அமைப்புகளால் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## டாக்டர்.மகாலிங்கம் கல்லூரியில்

# பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் கண்காட்சி

✍ தி கோவை மெயில்

டாக்டர்.மகாலிங்கம் பொறியியல் கல்லூரி மற்றும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் இணைந்து பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் கண்காட்சியை வெள்ளிக்கிழமை நடத்தியது.

நிகழ்வில் ஆர்.கே.ஆர் கல்வி நிறுவனங்களின் நிறுவனர் மற்றும் தலைவர் கே.ராமசாமி தனது சிறப்புரையில் கற்றலின் முக்கியத்துவத்தையும், சமூகத் தேவைகளைத் திறமையாக மாற்றியமைக்கும் ஒருவரின் முழுமையான வளர்ச்சிக்கு கல்வி எவ்வாறு உதவுகிறது என்பதையும் எடுத்துரைத்தார்.

இந்த அறிவியல் கண்காட்சியில் அறிவியல், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் போன்றவை முக்கிய தலைப்புகளாகப் பட்டியலிடப்பட்டது. மேலும், விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பு, பேரிடர் மேலாண்மை, கணிதம் மற்றும் வாழ்க்கை, சுகாதாரம் மற்றும் ஆற்றல் பாதுகாப்பு என பல்வேறு தலைப்புகள் வழங்கப்பட்டன. இரு பிரிவுகளாக நடைபெற்ற இக்கண்காட்சியில் 9, 10 , 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் கலந்துகொண்டனர். முதல் பிரிவில் 27 பள்ளிகளிலிருந்து 264 மாணவர்களும், இரண்டாவது பிரிவில் 19 பள்ளிகளிலிருந்து 335 மாணவர்களும் பங்கேற்றனர்.

மேலும், அறிவியல் கண்காட்சியில் சிறந்த பங்களிப்பை வழங்கிய மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு,அவர்களுக்கு என்ஐஏ கல்வி நிறுவனங்களின் செயலர் ராமசாமி மற்றும் எம்சிஇடி முதல்வர் கோவிந்தசாமி ஆகியோர் ரொக்கப் பரிசு, சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை வழங்கினர்.

இதில் முதல் பிரிவில் பங்கேற்ற 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ.10,000 , இரண்டாம் பரிசாக ரூ. 7500 மற்றும் மூன்றாம் இடப் பரிசாக 5000 ரூபாய் ரொக்கமாக வழங்கப்பட்டன. அவ்வகையே, இரண்டாம் பிரிவில் பங்கேற்ற 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கு ஊக்கத்தொகை பரிசுகள் வழங்கப்பட்டன. இதுமட்டுமின்றி, 6 பள்ளிகளை சேர்ந்த மாணவர்களுக்கு ஆறுதல் பரிசும் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் கல்லூரி டீன்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.




மாணவர்களின் அறிவியல் திறனை சிறப்பு விருந்தினர் கே.ராமசாமி, நிறுவனர் மற்றும் தலைவர், ஆர்.கே.ஆர் கல்வி நிறுவனம்; லோகநாதன், தலைமையாசிரியர், ருக்மணியம்மாள் மேல்நிலை பள்ளி; ராமசாமி, செயலாளர், என்ஐஏ கல்வி நிறுவனம் உள்ளிட்டோர் பார்வையிடுகின்றனர்.

# சர்வதேச ரோபோடிக் போட்டியில் சச்சிதானந்த பள்ளி முதலிடம்

✍ தி கோவை மெயில்

சச்சிதானந்த ஜோதி நிகேதன் பள்ளியின் ரோபோடிக் அணி சர்வதேச அளவில் நடைபெற்ற போட்டியில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

அபுதாபியில் நடைபெற்ற இப்போட்டியில் சச்சிதானந்த பள்ளியிலிருந்து எக்ஸ்ப்ளோரர் பிரிவில் இரண்டு அணிகளும், ஸ்டார்டர் பிரிவில் இரண்டு அணிகளும் பங்கேற்றன. எக்ஸ்புளோரர் பிரிவில் 24 அணிகள் பங்கேற்ற போட்டியில் இரு அணிகளும் முதல் இடத்தைப் பெற்றன. அதேபோல் ஸ்டார்டர் பிரிவில் 32 அணிகள் பங்கேற்றதில் 5 மற்றும் 6வது இடத்தை பிடித்தன.

இதில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இந்தியா, பிலிப்பைன்ஸ், லெபனான், தாய்லாந்து, இந்தோனேஷியா மற்றும் மெக்சிகோ ஆகிய 7 நாடுகளிலிருந்து பல்வேறு பிரிவுகளில் மொத்தம் 72 அணிகள் பங்கேற்றன.



வெற்றி பெற்ற மாணவர்களைப் பள்ளியின் நிர்வாக அறங்காவலர் ராமசாமி, ரூட்ஸ் நிறுவனங்களின் துணைத் தலைவர் வருண்கார்த்திகேயன், பள்ளிச் செயலர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் உள்ளிட்டோர் பாராட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

## Toyota to create 2000 jobs in Karnataka

✍ The Covai Mail

Toyota Kirloskar Motor (TKM) signed a Memorandum of Understanding (MOU) with the Government of Karnataka, investing around INR 3,300 crores to enhance its operations and build a new plant in Bidadi.

Celebrating 25 years in India, this marks TKM's commitment to "Make in India" and "Atma Nirbhar Bharat".

The investment aims to boost local manufacturing, create 2,000 jobs, and contribute to the state's EV initiatives. TKM's CEO, Yoshimura, emphasized the company's positive outlook on the Indian market and its focus on sustainability.

This move aligns with TKM's past contributions, including INR 16,000 crores investment, 88,000 jobs, and cumulative exports of approx. INR 30,000 crores. The company's future focus includes clean and green technology, aiming for Carbon Neutrality by 2050.

## Microsoft Introduces Outlook Lite

✍ The Covai Mail

Microsoft has unveiled Outlook Lite, a tailored email and SMS app for Indian users, offering a blend of email and SMS functionalities. The app, optimized for lightweight devices, prioritizes speed and efficiency on any network.

Noteworthy features include support for Indian vernacular languages, voice typing, transliteration, and reading emails in regional languages. Currently accommodating Hindi, Tamil, Telugu, Marathi, and Gujarati, Outlook Lite plans to expand its language repertoire to cater to India's linguistic diversity.

The app also streamlines SMS messaging, categorizing messages for transactions, promotions, and personal use, providing a unified inbox for organized communication. Additionally, Outlook Lite offers reminders for essential tasks, addressing the challenge of information overload.

## Robotic Innovation in Joint Replacement

✍ The Covai Mail

India is confronting a mounting health crisis as diabetes and prediabetes afflict a substantial portion of the population, with 11.4% living with diabetes and 15.3% in prediabetes stages, as per the Lancet Diabetes & Endocrinology.

Amidst this, concerns arise about the safety of joint replacement for diabetic osteoarthritis patients. Dr. R. Jayakumar from Kavya Ortho Centre in Coimbatore dispels myths, emphasizing that, when executed with caution and precision, joint replacement can be safe for diabetic individuals.

Maintaining optimal blood sugar levels is crucial, and a thorough preoperative assessment addresses potential diabetes-related complications.Robotic joint replacements, reducing surgical trauma, offer added benefits for diabetic patients, potentially facilitating faster healing.

Customized treatment strategies, guided by healthcare providers, can bring relief, emphasizing the necessity of timely intervention for improved joint function and an enhanced quality of life.

# Pricol Group's Feast of Flavours

# Rasaனை; New Dynamic Taste & Experience







Every Dish is a masterpiece of flavour and creativity

*For those seeking an authentic yet comfortable dining experience, Rasanai and Little Soi should top the list for a flavourful escapade in Coimbatore.*



✍ The Covai Mail

Coimbatore's food scene just got a tasty upgrade with the Pricol Group unveiling two exciting eateries—Rasanai and Little Soi. Nestled in the Lakshmi Mills Urban Centre, these establishments delve into South Indian and Southeast Asian street food, offering a gastronomic journey through vibrant flavours.

Rasanai, celebrates the diverse street food cultures of the five southern states. Signature dishes like the aromatic Kizhi Parotta and robust Military Hotel Mutton Chops showcase the region's culinary tapestry. The menu also highlights the unique flavours of Andhra cuisine with dishes like Ulavacharu Kodi Biryani.

Little Soi, an adoption of Chennai's Soy Soi, brings Southeast Asian culinary finesse to Coimbatore. The menu, inspired by Far East flavors, features iconic dishes like Indonesian Rendang, Nasi Goreng, and Edamame and Truffle dumplings. Sweet endings come in the form of Macau Milk Fritters.

Chef Sheik Mohideen of Rasanai and Chef Peter Tseng of Little Soi are on a mission to redefine the culinary landscape in Coimbatore.

Chef Mohideen added, "Rasanai focuses on street food from four South Indian states – Kerala, Andhra, Karnataka, and Tamil Nadu. We serve unique dishes, categorizing them into regions like Mappila, Rayalaseema, Telangana, Mysore, Mangalore, Kongunadu, Chettinad, and Najil Naadu.

We aim to showcase new, long lost and unseen dishes of South India, breaking the perception limited to idly, dosa and vada. Rasanai's menu is 90% unique to us, featuring dishes never seen before in Coimbatore."

Chef Tseng highlighted, "Most Pan-Asian restaurants focus on Thai and Chinese, but we go beyond, serving dishes of Indonesia, Vietnam, Burma, Singapore, Japan, and Korea, etc.

Our goal is to make these exotic foods accessible and affordable to everyone in Coimbatore, breaking the misconception that that these foods are exclusive for 5-star hotels. Also, we want to offer a 5-star experience at an affordable cost, with the average price of dishes not exceeding Rs 650."

They emphasized their commitment to authenticity, importing 65-70% of ingredients for Little Soi to maintain Southeast Asian flavours.

## AIMS Explores Critical Thinking

✍ The Covai Mail

Association of Indian Management Schools (AIMS) hosted a virtual Inspiring Young Leaders Session on "Critical Thinking @ Workplace" on November 24, 2023. Deepali Naair, Group Chari Marketing Officer, of CK Birla Group, shared insights on the pivotal role of critical thinking in problem-solving and strategic decision-making.

Prof. Dipak Saha, Institute of Engineering & Management, Kolkata, moderated the session, emphasizing the importance of clear, reasonable, and reflective thinking in decision-making processes.

The session underscored how employers value robust critical thinking skills, fostering better self-understanding, motivation, and goal-setting among employees. Participants gained insights into observation, analytical, communication, and problem-solving skills through the interactive platform.

These sessions, a hallmark of AIMS, contribute significantly to both professional and personal development.

## KMCH Nursing College's Course on Newborn Care

✍ The Covai Mail

KMCH College of Nursing Department of Child Health Nursing organized a Short Term Skill Development course on "Essential Newborn Care" from 20.11.2023 to 22.11.2023.

The chief guest, Dr. A.R. Srinivas, Consultant Neonatologist, KMCH, highlighted the theme of Newborn Week 2023 and Prematurity Day during the inauguration. Prof. Madhavi, the Principal, presided over the event.

She discussed the current scenario of neonatal mortality and stressed the importance of early initiation of newborn care.

On Day 1, sessions covered topics such as newborn and preterm care, introduction to essential newborn care course, identification of risk factors, and hands-on training for various essential skills. Prof. Mahalakshmi, from the Dept of Child Health Nursing, conducted a session on the classification of newborns.

Day 2 featured Dr. Abiramalatha, Consultant Neonatologist, KMCH, who discussed advanced care, including assessing danger signs, administering antibiotics, providing advanced care, recognizing severe jaundice, and stabilizing for referral as needed.

Practical training on routine care and intermediate care was provided by various faculty members.The program concluded with an objective structured practical examination with a case scenario.

A total of 117 students from various nursing programs participated in the course.

## RCD Launches "Limp 2 Run" Project

✍ The Covai Mail

The Rotary Club of Coimbatore Downtown has launched the "Limp 2 Run" global grant project, a 40 Lakhs initiative providing free arthroscopy surgeries for knee ligament injuries.

In collaboration with Kochouseph Thomas Chittilappilly Direct Term Gift and Rotary Club of Germantown (Memphis), USA, this marks RCD's second global grant project. President Rtn.Sundar and Chairman Rtn. Godwin lead the project, addressing financially weak sportsmen and economically disadvantaged individuals.

The initiative, started last year, has successfully aided its first beneficiary, Rajdurai, a kabaddi player. Prospective beneficiaries identify ligament tears, undergo evaluation at VGM Hospital, and if meeting criteria, receive free surgery. Governor Rtn Vijaykumar, President Rtn Mohanraj, and others support the project's continuity. The launch event on Nov. 21st featured Chief Guest Governor Rtn. Vijaykumar and Guest of Honor Balakrishnan, Commissioner of Police, Coimbatore.

Key figures like Rtn Dr. Mohanprasad and Rtn Dr. Suman played pivotal roles, ensuring the project's success. Special invitees included Rtn.Dr.Mohan Prasad, Rtn. Chella K Ragavendra, Rtn. Gokulraj, Rtn. Ilango, and Rtn. Balaji Babu, among others, demonstrating widespread collaboration.



*(From Left) Rtn Godwin, Project Chairman - Limb to Run; Rtn Gokulraj, District Director; Rtn TR Vijaykumar, District Governor; Rtn Ilango, Assistant Governor; Balakrishnan, Commissioner of Police; Rtn Guhan, Secretary; Rtn Mohanraj President; Rtn Dr Suman, VGM Hospital*

## Experience the German Spirit : Oktoberfest hits CBE



*(From Left) Ramesh Chandrakumar, GM - Operations, The Grand Regent; Akila Shanmugam, Director, Goethe Zentrum; Michaela Kuchler, German Consul General, German Consulate General, Chennai; German Chef Kurt Henkensmeier; G.D. Rajkumar, Md, Gedee Weiler*

✍ The Covai Mail

Coimbatore's Goethe Zentrum is hosting a special event, "The German Oktoberfest," for the first time in the city. The celebration kicked off at Hotel The Grand Regent on Nov 24, with Michaela Kuchler, the German Consul General, as the chief guest.

The event, inspired by Germany's carnival tradition, runs Friday and Saturday from 5.00 pm to 11.00 pm and Sunday from 11.00 am to 2.00 pm and 5.00 pm to 11.00 pm.

Adding a touch of Bavarian charm, German Chef Kurt Henkensmeier, President of the German Chefs Association, is in Coimbatore until the end of November, offering a delightful culinary journey with German delicacies.

The festivities also feature the German Music Band "Blechsauga," led by Armin Seibert, playing original Oktoberfest tunes. With engaging German activities for all ages, the Oktoberfest highlights authentic German food and beverages. It's a unique opportunity for Coimbatore to embrace German culture, especially with the presence of German companies in the city. Tickets are available at the venue, Goethe Zentrum, and on BookmyShow.

## TNAU VC Awarded for Agrometeorology Contributions



*(Left to Right) M. Mahapatra, Director, Indian Meteorological Department, V.Geethalakshmi, Vice-Chancellor, TNAU, AlpanaKateja, Vice – Chancellor, Rajasthan University, RK. Giri, PVS. Raju, Professor, Amity University, Jaipur*

✍ The Covai Mail

V. Geethalakshmi, Vice Chancellor of TNAU, was honoured as a Fellow of the Indian Meteorological Society for her outstanding contributions to meteorology.

The award, presented by M. Mahapatra, Director, Indian Meteorological Department during the National Symposium on Tropical Meteorology - TROPMET 2023, held at Birla Institute of Science Research, Jaipur, recognized her pivotal role in global Agrometeorology research.

V. Geethalakshmi's initiatives include establishing the Agro Climate Research Centre and delivering Weather Based Agro-Advisory Services in Tamil Nadu, empowering farmers with informed decisions.

She developed a toolkit for district-scale rainfall prediction using real-time indicators. Her leadership in post-disaster recovery after the 2004 Tsunami and Gaja cyclone in 2018 showcased her dedication. She also played a key role in policy development, contributing to Tamil Nadu's Climate Change Action Plan, Drought Policy, and India's Science Technology Innovation Policy 2020.

Her impact extends to establishing Automatic Weather Stations and implementing Weather Based Crop Insurance Schemes, highlighting her holistic approach to agricultural development.

## Leister Group Ignites Local Production

✍ The Covai Mail

Switzerland's Leister Group inaugurated "Weldy Technologies India Pvt. Ltd." in Coimbatore on Nov 23, addressing India's growing demand for "Weldy" brand products.

The facility focuses on local production of hot air hand tools and plastic welding machines for applications like tent production and advertising banners.

Following a "Make in India for India" approach, the company tailors products to meet local needs, aiming to develop new Weldy items in India.

Leister Group CEO Martin Zingg emphasized the brand's commitment to functionality, quality, and affordability. Christiane Leister, President of the Board, highlighted the company's presence in India since 1987, with Leister Technologies India Pvt. Ltd., established in Chennai in 2012. The inauguration witnessed the presence of notable dignitaries including Bruno von Wyl, Leister, Group CTO/Weldy India Project Director, Ruediger Schroeder, M+V Altios, Director Weldy India, Arun Kumar, Managing Director, Patrick Mueller, Deputy Consul of Switzerland, Banglore.



*(From Left) Christiane Leister, Leister, Chairperson of the Board, and Martin Zingg, Leister, Group CEO/Chairman Weldy India and Patrick Mueller, Deputy Consul of Switzerland, Banglore in the Inauguration of Weldy Technologies India Pvt. Ltd., in Coimbatore*

To Advertise in THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

Disclaimer: The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan

# மருத்துவர்களை நாத்திகவாதிகளும் வணங்குவர்

**- நாகராஜன்,**
**நிறுவனர், ராம்ராஜ் காட்டன்**



இந்தியன் சொசைட்டி ஆஃப் கிரிட்டிகல் கேர் மெடிசின் கழகத்தின் தினவிழா நிகழ்ச்சி கோவை கிளை சார்பாக அண்மையில் நடந்தது.

சிறிய கொப்புளங்கள் மற்றும் புண்களில் உள்ள கிருமிகள் ரத்தத்தில் கலந்து உடல் உறுப்புகளில் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதனால் உண்டாகும் அபாயங்கள் குறித்த தொற்று நோய் விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்தும் பொருட்டு இந்த ஆண்டு "செப்சிஸ் தடுப்பு, அதற்கான சிகிச்சைகள்" என்ற தலைப்பில் இந்தியன் சொசைட்டி ஆஃப் கிரிட்டிகல் கேர் மெடிசின் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் நிறுவனர் கே.ஆர் நாகராஜன் சிறப்புரையாற்றினார். அப்போது பேசிய அவர், மருத்துவ நிகழ்வுக்கு எதற்காக என்னை அழைத்தார்கள் என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. பின்னர் நானே புரிந்து கொண்டேன். இந்த நிகழ்ச்சியின் கருப்பொருள் தொற்று. தூய்மையாக இருந்தால் தொற்று பரவாது. தூய்மைக்கு எடுத்துக்காட்டு வெண்மை. அதற்காகவே என்னை அழைத்திருக்கின்றனர் என்று நகைப்புடன் பேசிய அவர்.,


கடவுளாக வாழ்பவர்கள் மருத்துவர்கள். எப்படிப்பட்ட நாத்திகவாதிகளாக இருந்தாலும் கூட தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெரும் தங்களின் உறவுகளை காப்பாற்றும் மருத்துவர்களை கைகூப்பி வணங்குவர். இறைவனுக்கு நிகரானவர்கள் மருத்துவர்கள் என மருத்துவர்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார்.




நிகழ்ச்சியினை குத்துவிளக்கேற்றி துவக்கி வைக்கிறார்கள் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் நாகராஜன் மற்றும் பி.எஸ்.ஜி மருத்துவமனை இயக்குநர் டாக்டர் புவனேஸ்வரன். உடன், கழகத்தின் உறுப்பினர்கள்.

## தீவிர சிகிச்சை பிரிவினர் இன்றியமையாதவர்கள்

**கிருஷ்ணராஜ் வாணவராயர்,** தலைவர், பாரதீய வித்யா பவன்




காணொலி வாயிலாக கலந்து கொண்டசிறப்பு விருந்தினர் கல்வியாளர், பாரதீய வித்யா பவன் தலைவர் கிருஷ்ணராஜ் வாணவராயர் பேசுகையில், நம்மில் பலர் உடல் சார்ந்து உண்டாகும் சில பிரச்னைகளை அலட்சியமாக விட்டு விடுகிறோம்.

இதனால் எதிர்பாராத விளைவுகளை சந்திக்க நேர்கிறது. ஆகையால், எப்போதும் வருமுன் காப்போம் என்று இருக்க வேண்டும். தீவிர சிகிச்சை பிரிவில் செயல்படும் மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்டோரின் பணிகள் இன்றியமையாதது என்று கூறினார்.

## பிரபஞ்ச ஆற்றலுடன் இணையும் மருத்துவம்

டாக்டர் **புவனேஸ்வரன்,** இயக்குநர் பி.எஸ்.ஜி மருத்துவமனை



பி.எஸ்.ஜி மருத்துவமனை இயக்குநர் டாக்டர் புவனேஸ்வரன் பேசினார். அவர் கூறியதாவது: எலக்ட்ரான் களின் நகர்வுகள் இல்லையெனில் மின்சாரம் இல்லை. அதுபோலவே நமது உயிர் அணுக்கள் செயல்படுகிறது. இதுவே வேதாத்திரியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மருத்துவ துறையில் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் அதிகம் இருக்கிறது என மருத்துவத்துடன் பிரபஞ்ச ஆற்றலை ஒப்பிட்டு பேசினார். இதனையடுத்து, செப்சிஸ், தொற்றுநோய் தொடர்பான மருத்துவர்களின் கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை ராயல் கேர் மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவின் தலைவர் டாக்டர் சிவக்குமார், ஜி.கே.என்.எம்.மருத்துவமனையின் மருத்துவர் சத்தியமூர்த்தி ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

# கே.பி.ஆர் பெண் பணியாளர் கல்வி பிரிவின் பட்டமளிப்பு விழா




கே.பி.ஆர் குழும நிறுவனங்களின் சார்பாக பெண் பணியாளர் கல்வி பிரிவின் 10வது பட்டமளிப்பு விழா தெக்கலூரில் உள்ள நிறுவனத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கே.பி.ஆர் குழுமத்தின் தலைவர் ராமசாமி தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக டெல்லி அரசின் பொதுப்பணி, வணிகவரி மற்றும் குடிநீர் வாரியத்தின் முதன்மை செயலாளர் அன்பரசு, சைமாவின் முன்னாள் தலைவர் ராஜ்குமார், தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஆறுமுகம் மற்றும் இன்போசிஸ் நிறுவனத்தின் மனித வள மேம்பாட்டு துறை துணைத்தலைவர் சுஜித் குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். மேலும், கே.பி.ஆர் மில் நிறுவனங்களின் செயல் இயக்குநர்கள் சக்திவேல், ஆனந்த கிருஷ்ணன் மற்றும் கல்லூரி முதல்வர் சரவணப்பாண்டி ஆகியோர் பங்கேற்றனர். இந்த பட்டமளிப்பு விழாவில் 405 மாணவிகள் பட்டம் பெற்றனர்.

# மூட்டு வலியா? இலவச யோகா பயிற்சிக்கு வாங்க

✍ தி கோவை மெயில்

ஈஷா யோக மையம் சார்பில் 'உயிர் நோக்கம்' என்ற பெயரிலான 3 நாள் இலவச யோகா வகுப்பு டிசம்பர் 1ம் தேதி முதல் 3ம் தேதி வரை ஆன்லைன் வாயிலாக நடைபெற உள்ளது.

இவ்வகுப்பு 3 நாட்களும் தினமும் 2 மணி நேரம் தமிழில் நடைபெறும். காலை 6 8, பகல் 10 12, மாலை 6 8 என 3 நேரங்களில் ஏதாவது ஒன்றை தேர்வு செய்து கொள்ளலாம். இவ்வகுப்பில் 12 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

இதில் யோக நமஸ்காரம், நாடி சுத்தி போன்ற எளிமையான அதேசமயம் சக்திவாய்ந்த யோக பயிற்சிகள் கற்றுக்கொடுக்கப்பட உள்ளது. இப்பயிற்சிகளைத் தினமும் செய்வதன் மூலம் உடல் ஆரோக்கியம் மற்றும் மன நலன் மேம்படும்.

குறிப்பாக முதுகுத்தண்டு வலுப்பெறும். மூட்டு வலியிலிருந்து விடுப்பெறலாம். உடல் ஆரோக்கியம் மேம்படும். மன அழுத்தம் நீங்கும்.

இவ்வகுப்பில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் 73836 73836 என்ற எண்ணிற்கு மிஸ்டு கால் கொடுத்தால், ஒரு குறுஞ் செய்தி வரும். அதில் உள்ள லிங்கை கிளிக் செய்து முன்பதிவு செய்து கொள்ளலாம் அல்லது இந்த isha.co/unom இணைப்பில் பதிவு செய்து கொள்ளலாம். மேலும், நவம்பர் 25ம் தேதிக்குள் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

# ஆன்மீகத்திற்கு உறவுகள் தடையா?

ஆன்மீகத்தில் வளர வேண்டுமென்றால் உறவுகளை விட்டுவிட வேண்டுமா என்று சிலர் கேட்கிறார்கள். ஆன்மீகம் என்பது உள்நிலை சார்ந்தது. உறவுகளோ புறவுலகம் சார்ந்தவை. எனவே ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போகுமா என்னும் கேள்விக்கே இடமில்லை.

ஆன்மீகத்தில் வளர முதலில் உங்களுக்கு உங்களைப் பற்றிய புரிதல் வேண்டும். மற்றவர்கள் உங்களை எப்படிப் புரிந்து கொள்கிறார்கள் என்பதெல்லாம் முக்கியமில்லை. உங்கள் வலிகள் போராட்டங்கள் எல்லாமே தனிமனிதர் சார்ந்த விஷயம்.

எனவே, ஒவ்வொருவரும் தன்னைத்தானே பார்த்துக் கொள்ள வேண்டும். ஆன்மீகம் என்பது உங்கள் உள்நிலையில் நிகழ்வது. வெளியே என்ன செய்ய வேண்டுமென்பது உங்கள் விருப்பம். உறவுகளுடன் இருப்பதா, தனிமையில் இருப்பதா, நகரத்தில் வாழ்வதா மலைகளுக்குப் போய் சேர்வதா என்பதெல்லாம் நீங்கள் எடுக்க வேண்டிய முடிவு. அதற்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் சம்பந்தமில்லை.

அடுத்து யாருடன் உங்களுக்கு எந்தவிதமான உறவு இருக்கிறது என்பதும் உங்கள் தனிப்பட்ட விருப்பத்தையும் தேவையையும் பொறுத்தது. எனவே, ஆன்மீகத்தையும் உறவுகளையும் குழப்பிக் கொள்ளாதீர்கள். இரண்டும் வெவ்வேறு அம்சங்கள். ஆன்மீகப் பாதையில் நடையிடும் பலரும் உறவுகளை உதறக் காரணம், ஆன்மீகமல்ல. அவர்களால் உறவுகளின் நிபந்தனைகளையும் நெருக்கடிகளையும் தாங்க முடிவதில்லை.

உறவுகளை விட்டுவிட்டு வருமாறு ஆன்மீகம் வலியுறுத்துவதில்லை. ஆனால், பல நேரங்களில், ஆன்மீகத்தை விட்டுவிட்டு வருமாறு உறவுகள் வலியுறுத்துகின்றன. எனவே, இரண்டில் ஏதாவது ஒன்றை விட்டுவிடுவதென மனிதர்கள் தீர்மானிக்கிறார்கள்.

இதில் துரதிருஷ்டம் என்னவென்றால், ஆன்மீகத்திற்காக உறவுகளைத் துறந்தவர்களை விட உறவுகளுக்காக ஆன்மீகத்தைத் துறந்தவர்கள்தான் அதிகம். உண்மையில் இவையிரண்டும் ஒன்றுடனொன்று முரண்பட்டவையே அல்ல.

உங்கள் உள்நிலையில் நிகழும் ஒன்று, யாருடனாவது அல்லது எதனுடனாவது உங்களுக்கிருக்கும் உறவுடன் முரண்படப் போவதேயில்லை. ஆனால், நீங்கள் இப்படித்தான் இருக்க வேண்டுமென ஓர் உறவு நிபந்தனை விதிக்கும் போதுதான் அது தடையாக மாறுகிறது.

இது பல இடங்களில் நிகழ்வதைப் பார்த்திருக்கிறோம். ஒருவர் தியானம் செய்யத் தொடங்குகிறார் என்றால், முதலில் அவருடைய குடும்பம் மகிழ்ச்சியடைகிறது. அவரது நிபந்தனைகள் குறைகின்றன. அமைதியாய் இருக்கிறார். முன்பைவிட நன்றாக செயல்படுகிறார். ஆனால், அந்த மனிதர் ஆன்மீகத்தில் இன்னும் ஆழமாக செல்லச் செல்ல, அவரால் கண்மூடி அமர்ந்து மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது என்பது தெரியும்போது, சிக்கல்கள் ஆரம்பிக்கின்றன.

இதே மனிதர் வேறு ஒருவர் பின்னால் போனால் அவருடைய மனைவிக்கு அந்தச் சூழலை எப்படி கையாள்வதென்று தெரியும். ஆனால், ஒரு மனிதர் அவராகவே மகிழ்ச்சியாய் இருக்கும்போது மற்றவர்களின் பாதுகாப்பு உணர்ச்சி கேள்விக்குள்ளாகிறது. அதை ஓர் அபாயமாகவே அவர்கள் கருதுகிறார்கள். "இனிமேல் இந்த வீட்டில் தியானம் செய்யக்கூடாது," என்கிறார்கள்.


அந்த மனிதர், "சரி! நான் அமைதியாக அமர்ந்திருக்கிறேன்," என்கிறார். உடனே "அதெல்லாம் முடியாது. ஒன்று, ஏதாவது வேலை செய்யுங்கள், அல்லது என்னுடன் பேசுங்கள்," என்கிறார்கள். இப்படி எளிய விஷயங்களுக்குக்கூட வீட்டில் எதிர்ப்பு தெரிவிக்கும்போது விசித்திரமாகத் தோன்றும். சிலர் முட்டாள்தனமாக எதையாவது செய்யும்போது பிரிவு நேரிடும். என்னைச் சுற்றியிருக்கும் பலரோடும் தீவிரமும் ஈடுபாடும் மிக்க உறவுகள் எனக்கு உண்டு. அவை பல்வேறு தளங்களிலும் பரிமாணங்களிலும் செயல்படுகின்றன. ஆனால், என் ஆன்மீகத் தன்மையுடன் அவை எவ்விதத்திலும் முரண்படுவதில்லை.

ஏனென்றால், அவை இரண்டுமே வாழ்வின் வெவ்வேறு அம்சங்கள். உறவுகள் என்பவை வெளியுலகம் சார்ந்தவை என்பதால், அவற்றை முழுத் திறமையுடன் நீங்கள் கையாள வேண்டும். நீங்கள் ஆன்மீகப் பாதையில் போனாலும், உங்கள் வாழ்க்கைத் துணைவர் ஆன்மீகப் பாதையில் போனாலும் அதன் காரணமாக உங்கள் வாழ்வில் எவ்வித முரண்பாடும் ஏற்படக் கூடாது.

ஆன்மீகத்தில் ஈடுபடுவதில் ஒரு விஷயம் என்னவென்றால், உங்களுக்குள் ஏதோ ஒன்றின் சுவையை உணர்ந்து விட்டீர்களென்றால், அதுவே உங்கள் வாழ்வின் மையமாக மாறிவிடுகிறது. ஆனால், உங்களுடன் உறவில் இருக்கும் ஒருவர், தானே உங்கள் வாழ்வின் மையமாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். அப்படி இல்லையெனும் போது பாதுகாப்பற்ற உணர்வு அவர்களைத் தொற்றிக் கொள்கிறது.

மனிதர்கள் கடவுளை நம்புவதாகச் சொல்கிறார்கள். அப்படியானால் கடவுள்தானே அவர்கள் வாழ்வின் மையமாக இருக்க வேண்டும்? இதில் சிக்கல் உறவுகளல்ல. உறவுகளின் பாதுகாப்பற்ற உணர்வுதான். உறவுகள் அன்பின் அடிப்படையில் உருவாகும்போது சிக்கலில்லை. ஆனால், அவை எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் கட்டமைக்கப்படும்போது, சிக்கல் வருகிறது. மனிதர்கள் ஒருவரிடமிருந்து எதையோ பெற்றுக் கொண்டே இருக்கிறார்கள். அதைப் பெற முடியாதபோது வருந்துகிறார்கள்.

மாறாக, நீங்கள் ஆன்மீகப் பாதையில் இருக்கும்போது உங்கள் உறவுகள் மிகவும் மனமுதிர்ச்சியோடும் அற்புதமாகவும் அமையும். ஏனென்றால், மற்ற மனிதர்கள் மீது அபத்தமான எதிர்பார்ப்புகள் ஏதும் உங்களுக்கு இருக்காது. ஏனெனில், அந்த மனிதரை இன்னோர் உயிராக மதித்து நடத்துவீர்கள். இங்கே மிகவும் மதிக்கப்பட வேண்டியது உயிர்தான். மற்ற மனிதர்களையும் இன்னோர் உயிராகப் பார்த்து நடத்தினால் சிக்கல் இருக்காது.



**"ஆன்மீகத்தில் ஈடுபடுவதில் ஒரு விஷயம் என்னவென்றால், உங்களுக்குள் ஏதோ ஒன்றின் சுவையை உணர்ந்து விட்டீர்களென்றால், அதுவே உங்கள் வாழ்வின் மையமாக மாறிவிடுகிறது. ஆனால், உங்களுடன் உறவில் இருக்கும் ஒருவர், தானே உங்கள் வாழ்வின் மையமாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்.**